கார்த்திகை – 2020

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

*கார்த்திகை - 2020*

ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப : R.Mahendran, 34 Redriffe Road, Plaistow, London, e13 0JX, UK

மின்னஞ்சல் : Mullaiamuthan16@gmail.com

நன்றி : இணையம்



படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.


# வணக்கம்,

கார்த்திகை (2020) இதழுடன் சந்திக்கிறோம்.

சிற்றிதழ்களின் வருகை காத்திரமான நோக்கங்களை கொண்டவை. அவற்றின் தொடர்ச்சியான வருகை காத்திரமான செயல்பாட்டுடன், கடின உழைப்பையும் கொண்டவை. அவற்றை பரவலாக்குகிற வாசகர்களின் பங்களிப்பும் அவசியமானது. சில சிற்றிதழ்களுக்கு நண்பர்களின் ஆதரவும் இருக்கும். காற்றுவெளி விளம்பரங்கள் & சந்தா எதுவுமின்றி வெளிவருகிறது. பல தடவை கோரிக்கை வைத்தும் முடியாது போயிற்று என்பதே உண்மை.

இந்த இதழ் மூலமும் சந்தாவிற்கான கோரிக்கையையும் முன்வைக்கிறோம். நூல்களுக்கான, சிற்றிதழ்களுக்கான சிறு விளம்பரங்களையும். இவை சாத்தியப்படும் பட்சத்தில், சிறுகதை/ கவிதைப்போட்டிகளை நடத்த முயலலாம்.

காற்றுவெளி இலக்கியப்பூக்கள் எனும் பெயரில் கட்டுரைத் தொகுதியினை வெளியிட்டிருந்தது. அதுவும் தொடரமுடியாது போயிருந்தது.


தொடர்பில் இருங்கள்.

நம்பிக்கையுடன்,

சோபா.

● நௌஷாத் கான் லி

# பாப்பு என்கிற அம்மு குட்டி



டே ஒரு குடிய கெடுத்த கேடு கெட்ட பயலே உன்ன இந்த வயத்துல தான் சுமந்தேன்னு நினைக்கும் போதே உன்னை சுமந்த வயிறு பத்திக்கிட்டு எரியுதுடா ,எல்லாம் பிள்ளைகளும் பெத்தவங்களுக்கு நல்ல பேரை வாங்கி தருமாம் நீ காலத்துக்கும் அழியாத கெட்ட பேரை வாங்கி கொடுத்து இருக்கியேடா .

நீ எல்லாம் இதுவரைக்கும் உயிரோட இருக்கிறதே தப்புடா ,எங்கயாச்சும் கண் காணாம போய் செத்து போயிரு என்று சொல்லி அவள் கைகளாலேயே தன் மகன் நந்தகுமாரை அடித்தாள் நாச்சியாள் .

தன் தாய் அடித்தும் ஒரு வார்த்தை மறுப்பு பேசவோ ,தடுக்கவோ இல்லை .விதி செய்த சூழ்ச்சியால் அறிந்து செய்த தடுக்க முடியாத பாவங்களுக்கான சிலுவைகளை சுமக்க அவன் தயாராகவே இருந்தான் ஆனால் விதி கொடிது எந்த கங்கையில் மூழ்கியும் கழுவ முடியாத ஒரு பாவத்தை காலம் சாதி என்னும் சதி மூலம் அவன் மூலம் நிகழ்த்தி விட்டது .

சில வருடங்களுக்கு முன்பு

டே மச்சான் அபி அவளோட நான் எப்படியெல்லாம் வாழணும்னு முடிவு பண்ணி இருக்கேன் தெரியுமா ?

சொல்லு கேட்போம்

டே மச்சான் கல்யாணத்துக்கு அப்புறமும் நானும் -அவளும் தனி குடித்தனம் போகாம கூட்டு குடும்பமா வாழணும்டா என்ன தான் உள்ளுக்குள்ள

பாசம் இருந்தாலும் எப்போதும் மதிக்காத என் தம்பி பரதன் என் பாப்பு வந்ததுக்கு அப்புறம் என்னை அண்ணான்னு சொல்லணும் ,அம்மாவும் அவளும் அடுப்படியில் வேலை செஞ்சுக்கிட்டு இருக்கும் போது அம்மாவ நைசா பேசி வெளியே அனுப்பி விட்டிட்டு அவ எதிர்பார்க்காத சமயத்துல அவ இடுப்பை கிள்ளணும் ,மொட்ட மாடியில பௌணர்மி நிலவு வெளிச்சத்துல அவ கையால நிலாச்சோறு சாப்பிடணும் ,நைட் பத்து மணிக்கு மேல அவ ரெண்டு கையிலும் மருதாணி வச்சு விட்டிட்டு அதுக்கப்புறம் அவளுக்கு பணிவிடைகள் செய்திடணும் ,போதும் ,போதும்னு புள்ளகுட்டிகள் ஒரு டசன் பெத்துக்கணும்

ஏண்டா நந்து கற்பனையா இருந்தாலும் ஒரு நியாயம் வேணாமடா ?

போன வாரம் தான் ஒரு வேகத்துல உன் ஆளுக்கு முத்தம் தர போய் ,போன இடத்துல நீ முத்தம் தராம சொதப்ப அந்த பொண்ணு இங்கிலீஷ் படத்துல வர்ற மாதிரி கிஸ் கொடுத்து உனக்கு கை ,காலெல்லாம் ஆடி போய் பயத்துல டைபாயிடு வந்திடுச்சு ,உண்மை இப்படி இருக்கிறப்ப உன் கற்பனை ஓவரா தான் போகுது

டே மச்சான் அது முதல் தடவை அதான் புதுசா ஒரு விஷயத்தை பார்க்கவும் பயம் வந்திடுச்சு ,கல்யாணத்துக்கு அப்புறம் எல்லாம் பழகிடும் மச்சான்

உன் ஆளு காரி துப்புனது என் கண்முன்னாடி கற்பனைல வந்து போகுது மாப்ள அதனால கற்பனையா இருந்தாலும் கொஞ்சமா ரீல் ஓட்டு.

லூஸ்ல விடுறா ,விடுறா மாப்ள மி கிவி சீளிஹிஸி ஖ிணிஷிஜி திஸிமிணிழிஞ் ளிரி

ளிரி

ட்ரிங் ...ட்ரிங் (அப்போது நந்துவின் மொபைல் ஒலிக்கிறது )

சொல்லு பாப்பு

எங்கே இருக்கடா ?

அபியோட கடைத்தெருவுல பேசிக்கிட்டு இருக்கேன்டி

எங்கே இருந்தாலும் உடனே கோயிலுக்கு வா உன்கிட்ட முக்கியமான விஷயம் பேசணும்

சரி உடனே வர்றேன்

சில நிமிடங்களுக்கு பிறகு

சொல்லு பாப்பு

எதுக்கு கோயிலுக்கு வர்ற சொன்ன ?

வீட்ல நம்ம காதல் விஷயம் தெரிந்து போச்சுடா ,உசுரே போனாலும் கவுண்ட வம்சத்து பொண்ண மறவன் பரம்பரையில கொடுக்க மாட்டாங்களாம். ஒரு கவுண்டச்சியை ஒரு கவுண்டனுக்கு தான் கொடுப்பாங்களாம் ,குலம் மாத்தி கல்யாணம் பண்ணுறது அவங்க குருதியிலும் இல்லையாம் நான் எவ்வளவோ அவங்க கால் பிடிச்சு பார்த்தேன் உன்னை கொன்னு போட்டாலும் போடுவோம்டி ஆனா அவனோட உன்ன கூட விடமாட்டோம்டின்னு சொல்றாங்கடா .

அப்பா வயித்துலேயே காலால எட்டி உதைச்சிட்டாருடா வலியில உசுரே போன மாதிரி

இருந்தது,உனக்காக தான் அவ்வளவு வலியையும் பொறுத்துக்கிட்டு வீட்டுக்கு தெரியாம வந்து இருக்கேன் .

இங்க இருந்தா எங்க சாதியில எவனுக்காவது என்னை கட்டி வச்சிருவாங்கடா .எங்கேயாவது என்னை அழைச்சிட்டு போய் கல்யாணம் பண்ணுடா ,இந்த ஊரு ,சாதிசனம் நமக்கு வேணாம் எங்கேயாவது இவங்க கண் காணாத இடத்துக்கு போய் வாழ்ந்துக்கலாம் .

உன்னை நம்பி தான் வந்து இருக்கேன்டா ,என்னை விட்டிட மாட்டியே ?

உசுரே போனாலும் உன்னை விட்டிட மாட்டேன்டி என சொல்லி அவள் கரம் பிடித்தான் நந்து

அடுத்த நொடி அவன் தலையில் கட்டையால் ஒரு அடி விழுந்தது .இரத்தம் பீறிட்டு மண்ணில் விழுந்தது .திரும்பி பார்த்தான் அடித்தது வேறு யாருமில்லை அவனது அப்பா ரணசிங்கம்

ஏண்டா பீ திண்ணுற நாயே நீ என் மவனாலே ,மரபு மாத்தி கல்யாணம் பண்ணுறது நம்ம மறவன் பரம்பரையில இல்லைடா என் தாத்தன் ,பூட்டன் ,நான் ,உன் பெரியப்பா மக்க எல்லாரும் நம்ம மறவன் வம்சத்துல வந்தவள தாண்டா கல்யாணம் பண்ணானுங்க .

சந்தனம் குங்குமத்தோட சேர்ந்தா தாண்டா மரியாதை சாக்கடையோட சேர்ந்தா இல்லை பதினாறு வருஷம் குலதெய்வத்துக்கிட்ட தவமிருந்து நேந்துபெத்துக்கிட்ட புள்ளைடா நீ அதுக்காக தான் உன் உசுரை விட்டிட்டு போறேன் ,அந்த கவுண்டச்சி கைய பிடிச்சதுக்கே உன் மண்டைய பொளந்து இருக்கேன் அவள கல்யாணம் பண்ணனும்னு நினைச்ச புள்ளைன்னு பாசம் கீசமெல்லாம் பார்க்க மாட்டேன் குலசாமிக்கு கடா அறுக்கிற மாதிரி உன் கழுத்தை அறுத்து போட்டிடுவேன் .

இங்க பாரு புள்ள பொம்பளைய அடிக்கிற அளவுக்கு மறவன் குலம் தாழ்ந்து போயிடலை உங்களுக்கும் ,எங்களுக்கும் ஏணி வச்சாலும் எட்டாது ,என்ன தான் இருந்தாலும்,காசு பணம் வந்தாலும் நீங்க வேற ,நாங்க வேற இனிமேலாவது என் மவன் பின்னாடி சுத்தாதே மீறி சுத்துறதை பார்த்தேன் உன்னை எதுவும் செய்யமாட்டேன் என் மவன தான் கழுத்தை அறுத்து போட்டிடுவேன் .

கவுண்டச்சி கவுண்டனை கட்டுறது தான் அழகு உங்க அப்பன் ,ஆத்தா பார்க்குற பையனை கட்டிக்கிட்டு ஒழுங்கா குல கவுரவம் காக்குற மாதிரி வாழ பாரு என மூர்க்கத்தனமாய் அறிவுரையை சொல்லிவிட்டு இரத்தவெள்ளத்தில் மயங்கி கிடந்த தன் மகன் நந்துவை தூக்கி கொண்டு வீட்டிற்கு சென்றார் ரணசிங்கம்

நாச்சியா மருத்துவச்சியை கூட்டி வந்து உன் மவன் தலை காயத்துக்கு மருந்து போடு ,தலை காயம் ஆறனதுமே உன் மவன் இந்த நாட்டை விட்டே போயிடனும் இங்க இருந்தான்னா நம்ம மறவன் கவுரவத்துக்கே அவன் அவமானமா மாறிடுவான் நானும் கோபத்துல அவன பெத்த மவனுன்னு கூட பார்க்காம காணா பொணமா ஆக்கிடுவேன் .

சரிங்க புள்ளைக்கு நல்ல புத்தியை சொல்லி நான் அனுப்பி வச்சிடுறேன் தவமிருந்து பெத்த புள்ளைங்க அவன இனிமே எதுவும் செஞ்சிடாதீங்க

சில வாரங்களுக்கு பிறகு

மாப்ள இந்தா பாஸ்போர்ட் ,விசா அடுத்த வாரம் டியூட்டில சேரணும் ,அபுதாபியில வேலை மாசம் ரூம் ,சாப்பாடு போக கையில முப்பதாயிரம் பணம் நிக்கும் ,ஒரு ரெண்டு , மூணு வருஷம் ஒழுங்கா இருந்திட்டு வா எல்லாம் இங்கே நல்லதாய் மாறும் . இப்ப இருக்கிற சூழ்நிலையில நீ இங்கே இருந்தா உன்னை கொன்னு போட்டிடுவாங்க எனக்கு உன் காதல்ல விட உன் உசுரு எனக்கு முக்கியம் மாப்ள என நந்துவை கட்டிக்கொண்டு அழுதான் அபி

கவலை படாம போ உன் தகுதியை வளர்த்துக்கோ நிச்சயம் உன் காதல் கைகூடும் நான் எப்போதும் உனக்கு ஆதரவா இருப்பேன் நீ கவலை படாம போ என வழியனுப்பி வைத்தான் அபி.

புதிய நாடு ,புதிய ஊர் ,புதிய இடம் பல பாஷை பேசும் மனிதர்கள் ,பன்னிரண்டு மணி இயந்திர வாழ்க்கை ,தனிமை என அந்த அடுக்கு மாடி நகரம் அவன் வாழும் அடுக்கு மாடி கட்டில் வாழ்க்கைக்கு இடையே நரகமாய் காட்சியளித்தது .

இந்த வாழ்க்கை மலர் படுக்கை அல்ல முள் மெத்தை என்பதை அனுபவத்தால் உணர்ந்தான் ,ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாய் தெரிந்தது .சாதி மட்டும் குறுக்கே வரவில்லை என்றால் ஊரிலேயே பாப்புவோடு மகாராஜாவாக வாழ்ந்திருக்கலாம் என எண்ணினான் .எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும் சாதி வெறி பிடித்த ஊர்காரர்களை விட எல்லோரையும் நேசிக்கும் இந்த நாடும் ,மக்களும் போக போக பிடிக்க ஆரம்பித்தது ஆனால் அவன் பாப்பு இல்லாத வாழ்க்கை நீர் இல்லாத நிலம் போல உயிர் இல்லாத உடலில் நரக வேதனையில் வெந்து தவித்தான்

. நந்து வெளிநாடு வந்து பலமுறை முயன்றும் பாப்புவின் மொபைலில் ரிங் செல்வதாக இல்லை அவளுக்கு என்ன ஆச்சோ ,ஏதாச்சோ என அவன் நெஞ்சம் துடித்தது .

டே மாப்ள நீ கவலை படாதே பாப்புவுக்கு எதுவுமே ஆகலை அவ நல்லா இருக்கா ,அவங்க அப்பா ,அம்மா அவ மொபைல்ல உடைச்சு போட்டுட்டாங்க அவ்வளவு தான் .

நீ நல்லபடியா ஒரு ரெண்டு மூணு வருஷம் அங்கே இருந்திட்டு சம்பாதிச்சிட்டு வா இங்கே எல்லாமும் கால போக்குல நல்லதா மாறும்னு போன்ல ஆறுதல் சொல்லி அவன் மனதை தேத்தினான் அபி

பாப்புவோடு பேசாமல் ,பார்க்காமல் அவள் நினைவுகளோடு வாழ தொடங்கினான் நந்து

ஒவ்வொரு நாளும் நரக வேதனையாய் சென்றாலும் பாப்புவின் நினைவுகள் மட்டுமே அவனுக்கு ஆறுதலாய் இருந்தது .

இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு ..

ஊரில் சரியான வேலைவாய்ப்பு இல்லாததால் அபியும் அபுதாபி வந்தடைந்தான் அவனை அழைப்பதற்கு ஏர்போர்ட்டுக்கு நந்து தான் வந்தான் .

நீ எப்படி மாப்ள இருக்க ?

அப்புறம் என் பாப்பு எப்படி இருக்கா ?அவ நல்லா இருக்காளா ?

எப்பயாவது உன்ன பார்த்தா என்னை பத்தி கேட்பாளா ??

நந்து அத்தனை கேள்வி கேட்டும் அவன் அமைதியாகவே இருந்தான் .

என்ன மாப்ள நான் இவ்வளவு கேள்வி கேட்குறேன் நீ அமைதியாவே இருக்க ?

என்ன மாப்ள வந்ததிலிருந்து அம்மா ,அப்பாவ எதுவுமே கேட்கலை என்னை பேருக்கு நலம் விசாரிச்சிட்டு பாப்புவ மட்டுமே கேட்டுக்கிட்டு இருக்க ?

அப்பா ,அம்மாக்கிட்ட தான் வாரத்துக்கு ஒரு தடவை பேசுறேனே ?

என் பாப்புகிட்ட பேசி ரெண்டு வருஷம் ஆச்சுடா ? அவளை ரொம்ப மிஸ் பண்ணுறேன் ,அவ இல்லாத வாழ்க்கை ரொம்ப நரகமா இருக்கு .இந்த பாழாய் போன உடம்பு தான் இங்கே இருக்கு ,இந்த உசுரு ,மனசு ,புத்தி எல்லாமே பாப்புவோட நினைவுகளோட சுத்திக்கிட்டு கிடக்கு ..

எப்படா இந்த விசா முடியும் ,ஊருக்கு போய் என் பாப்புவ எப்ப கரம் பிடிப்பேனோன்னு மனசு ஏங்கிக்கிட்டு இருக்கு

அவன் அப்படி சொல்லவும் என்னை மன்னிச்சிடுடா மாப்ள என்று கட்டி கொண்டு அழுதான் அபி

என்ன ஆச்சு மாப்ள ?

ஏன் மன்னிப்பு கேட்குற ??

உன் பாப்புக்கு நீ ஊரை விட்டு வந்தவுடனே அவங்க அப்பா அவங்க சாதியில உள்ள சிங்கப்பூர்ல வேலைபார்க்குற பையனுக்கு கல்யாணம் பண்ணி கொடுத்துட்டாங்கடா ,இப்ப பாப்புவுக்கு ஒரு வயசுல ஒரு ஆண் குழந்தை இருக்கான் .

ஐயோ ,ஐயோ கடவுளே இதை கேட்கத்தான் இத்தனை நாள் உயிரோட இருந்தேனா என தன்னை தானே அடித்து கொண்டான் நந்து .

டே மாப்ள பைத்தியம் மாதிரி நடந்துக்காதடா ,,உனக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்கு ??

எனக்கு என் பாப்பு இல்லாம ஏதுடா வாழ்க்கை ?

தன்னை தானே அடித்து கொண்டும் ,அழுது கொண்டும் அவன் பேசியதை முதன் முதலாய் அபி பார்க்கவும் தன்னை தானே நொந்து கொண்டான்

எப்பவும் புன்னகை பொங்க பேசுற மாப்ளய இப்படி பார்க்கிறதுக்கே ரொம்ப கஷ்டமா இருக்கிது கடவுளே.

வேறு வழியில்லாமல் பாப்புவுக்கு போன் அடித்தான் அபி ,தங்கச்சி உனக்கு போன் அடிக்கிறது முறையில்லை ஆனா உனக்கு கல்யாணமான விஷயம் தெரிஞ்சதும் தன்னை தானே அடிச்சுக்கிறான்மா ,அவன் பொறந்ததிலிருந்து அழுதே பார்த்தது இல்லை அவன் அழுவுறத பார்க்க மனசு கஷ்டமா இருக்கு இப்படியே விட்டா செத்து போய்டுவானோன்னு பயமா இருக்குமா ?

நீ தான் தங்கச்சி அவனுக்கு நாலு நல்ல வார்த்தை சொல்லி அவன் வாழ நல்ல புத்தி சொல்லோணும்ன்னு போனை நந்துவிடம் கொடுத்தான் அபி .

நந்து நான் உன் அம்மு பேசுறேண்டா ,நீ ஆம்பளை புள்ளைடா ,நீ எதுக்குமே அழ கூடாது ,இந்த பொட்டச்சியை விட ஆயிரம் மடங்கு அழகுள்ள தேவதை உனக்கு சம்சாரமா

வருவாங்கடா ,வீணா போன இந்த சிறுக்கிய நினைச்சுக்கிட்டு எல்லாம் நீ அழ கூடாது ,எப்பவும் தைரியமா இருக்கணும் ,இந்த அற்புதமான வாழ்க்கையில் கடவுள் கொடுத்த அற்புதமான உயிரை யாருக்காகவும் விட்டிட கூடாது .நீ வாழணும் அது தான் எனக்கு முக்கியம் .

அவனுக்கு ஆறுதல் சொல்லி போனை வைத்தாள் பாப்பு என்கிற அம்முக்குட்டி.

நாள்தோறும் வேலை முடிந்து அறைக்கு வந்தவுடன் அலாரம் வைப்பது போல் பாப்புவுக்கு போன் அடித்து நலம் விசாரிப்பான் .வலிகள் நிறைந்த அவனது வாழ்க்கையில் பாப்புவின் தொலைபேசி உரையாடல் அவனுக்கு ஆறுதலாய் இருந்தது.

என்ன தான் சமூகம் ,பண்பாடு ,கலாச்சாரம் என்று பற்று இருந்தாலும் எப்போதும் சிடு ,சிடுவென எரிந்து விழும் கணவனிடம் கிடைக்காத ஆறுதல் ,அழிந்து போகும் உடலுக்காகவும், காமத்துக்காகவும் நெருங்கும் கணவனுக்கு மத்தியில் காமம் தவிர்த்து அன்போடு பேசும் நந்து உயர்ந்தவனாகவே தெரிந்தான் .என்ன தான் இந்த பாழாய் போன உடலுக்கு கணவன் சொந்தக்காரன் என்றாலும் அந்த அழியாத மனசுக்கு நந்து மட்டுமே சொந்தக்காரன் என்பதை அவள் ஆத்மார்த்தமாய் உணர்ந்தாள் .

என்ன தான் அவள் கழுத்தில் தாலி ஏறி இருந்தாலும் அவள் மனசிலிருந்து நந்து இன்னமும் கீழ் இறங்கவே இல்லை .இந்த சமூகத்துக்காகவும் ,தன் குழந்தைக்காக மட்டுமே பிடிக்காத வாழ்க்கையை ஒரு பிடிப்போடு வாழ்ந்தாள்.

ஒரு வருடங்களுக்கு பிறகு

வரும் வெள்ளிக்கிழமை நந்து விசா காலம் முடிந்து ஊருக்கு போக போகிறான் .ஊருக்கு போக போகிறோம் என்ற மகிழ்ச்சியை விட பாப்புவை பார்க்க போகிறோம் என்ற மகிழ்ச்சி தான் அவனை இன்னும் உயிர்ப்போடு வைத்திருக்கிறது .

நந்து ஆசைப்பட்ட அந்த நல்ல நாளும் வந்தது .ஊர் வந்து சேர்ந்தான் .ஊரே மயான அமைதியாய் இருந்தது .வீட்டிற்கு வந்திறங்கிய ஒரு மணி நேரத்திற்குள் அவன் செவிகளில் அந்த செய்தி வந்தடைந்தது .

எலே மாயி சின்னக்கவுண்டர் சிதம்பரம் வீட்ல எழவு விழுந்து போச்சு

ரொம்ப நாளா இழுத்துக்கிட்டு கிடந்துச்சே அந்த மூக்குப்பொடி கிழவியாலே ?

இல்லைடா சிங்காரம்

அவருடைய மூத்தப்பொண்ணு அம்மு தூக்குல தொங்கிடுச்சு

ஏன் லே அவ தூக்குல தொங்குனா ?

அந்த பொண்ணு புருஷன் மொபைல் கேடாகி போய் இருக்கு அதனாலே அந்த பொண்ணு போனை பயன்படுத்தி இருக்கான் அந்த டைம் பார்த்து ரணசிங்கம் மவன் போன் பண்ணி இருப்பான் போலிருக்கு அதான் யாரு என்னான்னு பொண்டாட்டிய கேள்வி கேட்டு துளாவி இருப்பான் போலிருக்கு அதான் மானத்துக்கு பயந்த பொண்ணு தூக்கு கயிருக்கு உசுர விட்டிருச்சு

எலே மாயி பய உன் ஆளுன்னு ஏன்லே மாத்தி சொல்லுற ,அந்த புள்ள மானத்துக்கு

பயந்து தான் உசுர விட்டிருக்கு ஆனா அந்த பய வெறும் கேள்வி மட்டுமா கேட்டான் ,அவன் கூட படுத்து தான் இந்த புள்ளைய பெத்தியாடின்னு நரம்பில்லாத நாக்கால தப்பா பேசுனது மட்டுமில்லாம நடு ரோட்ல போட்டு அந்த பொம்பளை புள்ளைய இழுத்து போட்டு அடிச்சான் .அந்த புள்ள லவ் பண்ணதை தவிர வேற என்னலே செஞ்சுது ??

நாமெல்லாம் இந்த பாழாய் போன சாதியால ஒரு உசுரையே பலி வாங்கிட்டோம்யா ,இந்த நேரம் பார்த்து அந்த ரணசிங்கம் மவன் வேற வந்து இருக்கான் .

இந்த ஊர்ல இன்னைக்கு என்ன நடக்க போகுதோ ஒரே பயமா கிடக்குதய்யா

என்றான் சிங்காரம் .

பாப்புவின் இறப்பு செய்தி ரணசிங்கம் வீடு வரை எட்டியது வந்ததும் வராததுமாக தன் மகன் நந்துவை சபித்ததோடு மட்டுமின்றி தன் கைகள் வலிக்க அடிக்கவும் செய்தாள் நாச்சியாள்.அவ்வளவு அடியையும் வாங்கி கொண்டு அழுத கண்களோடு பாப்புவின் வீடு வரை மூச்சிரைக்க ஓடியே வந்தடைந்தான் .அங்கு வாசலில் கூடியிருந்தவர்கள் அவ்வளவு அடித்தும் அவர்களை மீறி பாப்புவின் உடல் இருக்கும் அவள் வீட்டின் நடு கூடத்திற்கு வந்தடைந்தான் .

அவள் இறந்த உடலை கண்டு அவன் கண்களில் இரத்த கண்ணீர் வடியாத குறையாய் மௌனமாய் நின்றான் .அங்கு வந்தும் அவனை கண் ,மண் தெரியாமல் அடித்தனர் .அத்தனை பேரையும் தள்ளி விட்டு அங்கு பிணமாய் கிடந்த பாப்புவின் கால்களை பற்றி அவள் மேல் விழுந்தான் அடுத்த நொடி சுற்றியிருந்த கூட்டம் அவனை தூக்க முற்பட்டது ஏனோ அப்போது அவன் உடலில் உயிர் மட்டும் இல்லை அவன் கண்கள் மட்டும் மூடாமல் பாப்புவையே பார்த்து கொண்டிருந்தது .அவன் கண்களில் வழிந்து கொண்டிருந்த கண்ணீர் பாப்புவின் கால் விரல் தொட்டது . ▶


# ப.தனஞ்ஜெயன் கவிதை

எப்பொழுதும் அமர்ந்திருக்கும்
மரத்தின் கீழ்
காத்திருந்தேன்
ஒரு பறவைக்காக
அன்று அடர்ந்த இலைகளாக
இருந்த மரம்
வெறும் கிளைகளாக
இருந்தது இன்று
இலையுதிர்க்கால துளிர்த்தலில்
உற்சாகமாக வசந்தம்
தன் கடிதத்தை
எழுதிக்கொண்டிருந்தது
அந்த மரத்தில்.
எந்த திசையில் இருந்தோ
கிளை அமர்ந்த பறவை
வேகமாக ஒரு
இசையையும் அந்தக் கடிதத்தில்
சேர்த்து எழுதிவிட்டு
சட்டெனப் பறந்தது
நான் அன்று சென்றிருக்க வேண்டாம்
என நினைத்து திரும்பினேன்
ஏமாற்றத்தோடு.
என் பார்வை பட்ட கணம் பறந்து
சென்ற பறவை
மீண்டும்
அந்தக் கடிதத்தை
எப்பொழுது வந்து
எழுதி முடித்திருக்கும்
என்ற ஏக்கத்தோடு
இன்றும் செல்கிறேன் அதே
மரத்தடிக்கு. ▶

● ரத்ன ராஜூ

# என் மூச்சுக் காற்று

சென்னை தியாகராய நகர், டாக்டர் நாயர் ரோடு. பாண்டி பஜாரில் இருந்து இடப்புறம் திரும்பியதும் இடப்புறம் உள்ள பெரிய அப்பார்ட்மென்ட். முதல் மாடியில் ஜன்னல் அருகில் நான் ஈசி சேரில் உட்கார்ந்து சூடான காஃபியை உறிஞ்சிக் கொண்டிருக்கிறேன். ஜன்னல் வழியே வெளியே பார்த்தால் எதிரே ஹோலி ஏஞ் சல்ஸ் கான்வென்ட் தெரியும். நாயர் ரோடு போக்குவரத்தில் பரபரப்பாகவே இருக்கும்.



இப்படி ஒய்வாக அமர்ந்து காஃபி குடிப்பது எல்லாருக்கும் பிடிக்கும். ஆனால் எனக்கு காபி பிடித்திருந்தாலும், அதனோடு தொடர்புடைய நினைவுகள்தான் பிடிக்காது. முப்பதாண்டுகள் முன் நடந்தது, இப்போதும் என் புருவ மத்தியில் நின்று வதைக்கிறது.

தெருவைப் பார்த்தாற்போல் ஈசி சேரில் அப்பா. இந்தியன் படத்தில் சேனாபதிக் கவுண்டர் போலிஸ் அதிகாரியை சந்திக்கும் போது உட்காரந்திருப்பாரே, அது மாதிரி சகல வசதியும் உள்ள ஈசிசேர். கைப்பகுதியில் இணைத்திருக்கும் கட்டைகளை நீட்டி விட்டால் கால் நீட்டி படுத்துக் கொள்ளலாம். அல்லது தாராளமாக சப்பனமிட்டு உட்கார்ந்து கொள்ளலாம். வலப்புறம் கதவு திறந்த ஜன்னல். அம்மா கொடுத்த மூக்கைத் துளைக்கும் அரோமா காஃபியை டம்ளரில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக டபராவில் ஊற்றி ஊற்றி உறிஞ்சிக் கொண்டிருக்கிறார்.

அவருக்கு இடப்புறம் கொஞ்சம் தள்ளி மரப்பெஞ்சில் நான். அம்மாவோ அடுப்படியில், ஆனால் காதுகள் மட்டும் இங்கே. ஓசை யெழுப்பாமல் டிபன் வேலை நடக்கிறது. ஓசை வந்தால் நாங்கள் பேசுவது தெளிவாகக் காதில் விழாதல்லவா. சிறு சப்தம் கேட்டாலும் வேலையை நிறுத்திவிட்டு பேசுவதைக் கவனிப்பாள்.

அப்பா காஃபியை குடித்து முடிக்குமட்டும் காத்திருந்தேன். ஒருவழியாக தன்னுடைய

காலைக்கடன் - அவரைப் பொறுத்த வரை காஃபிதான் - குடித்து முடித்து டபரா டம்ளரை ஜன்னலில் வைத்தார். கண்ணாடியைக் கழற்றி மெல்லிய துணியால் துடைக்க ஆரம்பித்தார். எனக்கு இதுவே தருணமாகப் பட்டது. என் சித்தப்பாவின் மகனுக்கு திருமணம் இப்போதுதான் இனிதே முடிந்து விட்டிருந்தது. இனி இந்த ஊரில் நாங்கள் கட்டாயம் கலந்துக்க வேண்டிய விசேடம் ஏதுமில்லை. மெல்ல பேச்சுக் கொடுக்க யத்தனித்தேன்.

“அப்பா, நான் சொன்னதை யோசித்துப் பார்த்தீங்களா. என்ன சொல்றீங்க? அது சரிதானே?”

மௌனம்; கொஞ்சம் அதிகமாக நீடித்தது. தொண்டையைக் கனைத்துக் கொண்டு அப்பா பேசத் தொடங்கினார்,

“நீ சொல்றதை மேலோட்டமாப் பார்த்தா சரியாகத்தான் தெரியும். ஆனால் சரிப்படாது“

“என்னப்பா சொல்கிறீர்கள்? இங்கே நீங்க ரெண்டு பேரும் தனியே இருந்து கஷ்டப் படுவானேன்; அதும் இந்த வயசான காலத்தில. மருத்துவ வசதியும் கொறச்சல்தான?”

“அதென்னவோ வாஸ்தவம்தான். எல்லாத்துக்கும் மேல மனசு திருப்தின்னு ஒன்னு இருக்குதே! அது இங்கதான் கெடைக்கும். சரி, இப்போதைக்கு வேணாம்; பிற்பாடு பார்த்துக்கலாம். காலம் எப்படி நெட்டித் தள்ளுதோ அப்படி “

“அப்பா, உங்க மனத்திருப்தி போல எங்களோட மனத்திருப்தியும் முக்கியமா படலையா? அந்த நிம்மதிய ஏன் தரமாட்டேன்கறீங்க?”

பதிலில்லை. நீண்ட மௌனம்.

இதற்குமேல் இங்கு எதுவும் நடக்காது. அம்மாவிடம் சென்றேன். சமையலறை கதவருகில் கையில் கரண்டியுடன் நின்றிருந்த அம்மா நான் வர்ரதைப் பார்த்ததும் சரேலென அடுப்பை அடைந்து சாம்பாரைக் கிண்டி விட்டுக் கொண்டிருந்தாள். நான் உள்ளே வந்ததை கவனித்தும் கவனிக்காதவள் மாதிரி தர்ம சங்கடமாக நெளிந்தாள். நானே ஆரம்பித்தேன்,

“அம்மா, நீயாவது சொல்லேன் “

உடனே பதிலில்லை. சிறிது நேரம் கடத்தினாள். அவள் என்ன சொல்லப் போகிறாள். இத்தனை ஆண்டுகளாக அவள் சுயமாக எதைத்தான் பேசியிருக்கிறாள், இப்போது பேசுவதற்கு?

“நீயே எடுத்துச் சொல்லடா கண்ணா. பிடிவாதம் பிடித்தா இப்போ விட்டுட்டு கொஞ்ச நாள்ள மறுபடியும் பேசு. அதுவரை அவங்களும் சீர் தூக்கி பார்க்கட்டும்.” எந்த கமிட்மென்டும் இல்லாமல் அம்மா.

“தோட்டத்தில ஹேமாவும் அருணும் இவ்ளோ நேரமா என்ன பண்றாங்கன்னு போய்ப் பார் “அம்மா மெல்ல என்னை அங்கிருந்து நகர்த்துகிறாள். இந்த சாமர்த்தியமே அவளை இத்தனை ஆண்டுகளாகக் காப்பாற்றி வந்துள்ளது.

சமையலறை யிலிருந்து ரேழிக்கு செல்லும் கவைத் திறந்து கொண்டு சென்று கொல்லைக் கதவை யடைந்தேன். கிணற்றடியில் என் மனைவி ஹேமாவும், ஒன்றரை வயது மகன் அருணும் எதையோ ஒரு குச்சியால் விரட்டிக் கொண்டிருந்தார்கள். பின் தாழ்வாரத்தில் இருந்து பத்து படிகள் இறங்கி மண் தரைக்கு வந்தேன்.

“ரெண்டு பேரும் என்ன செய்றீங்க “என்று கேட்டபடியே அவர்களை நெருங்கினால், ஒரு தவளையை அருண் விரட்டிக் கொண்டிருந்தான், “போ...போ...”

தொங்கிப்போன என் முகத்தைப் பார்த்த மாத்திரத்திலே ஹேமா தெரிந்து கொண்டு விட்டாள்; இம்முறையும் தோல்விதான். நானும் சற்றும் தன் முயற்சியில் மனந்தளராத விக்கிரமாதித்தன் போல எத்தனை முறைதான் முயல்வது. அப்பா வேதாளம் மீண்டும் மீண்டும் முருங்கை மரத்தின் மீது ஏறிக் கொள்கிறது.

ஹேமா, “சரி...சரி.. இன்னும் காலம் கனியவில்லை, விட்டுப் பிடிப்போம். விடாப்பிடியா நின்னா அவரும் பிடிவாதம் பிடிப்பார்” என்றாள். அதென்னவோ உண்மைதான்.

ஆசிரியராக வேலை பார்த்து ரிடையர்டு ஆனாலும் பழைய மணவர்கள், வெளியூர் களிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் வரும் போது அப்பாவை கட்டாயம் பார்த்துச் செல்வார்கள். அதுகூட அவரின் முடிவுக்கு ஒரு காரணமாகும்.

மாலையே 110 ரயிலில் சென்னைக்கு புறப்பட்டோம். வழக்கம் போல அம்மா அவள் பங்குக்கு ஒரு குறையும் வைக்க வில்லை. மோர் மிளகாய், சுண்ட வத்தல், கொத்தவரை வத்தல், கூழ் வடாம், தாளிக்க கருவடகம் இத்யாதிகளை சிறுசிறு பாலித்தின் கவர்களில் போட்டு , வாயை ரப்பர் பேண்டு போட்டு சுற்றினாள்.

“ஊருக்கு போனதும் ஏர் டைட் டப்பாவுல மாத்திடுங்க”

மாலை 6 மணிக்கு பாபநாசம் போய் ரயிலைப் பிடித்தால் விடியற்காலை 5 மணிக்கெல்லாம் மாம்பலம் ஸ்டேஷனில் இறங்கிடலாம் லேட் இல்லை யென்றால்.

இதற்குப் பின்னும் பல முறைகள் பலனளிக்காத முயற்சிகள். எல்லா நேரத்திலும் அப்பா பிடிவாதமா மறுத்து விட்டார். அவர் எண்ண வோட்டத்தை நான் நன்கறிவேன்.

தன்னோட அப்பாவும், அம்மாவும் சென்றடங்கிய காவிரிக் கரையிலேயே தானும் சென்றடங்க வேண்டும் என்பதுதான் அது. இதை அவர் பல ஆண்டுகள் முன்பே ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லி யிருக்கிறார். நிச்சயம் அவர் வர மாட்டார்.

வயசானவர்கள் எல்லாருமே அவர்களின் இளமைக் கால நிகழ்வுகளில் மூழ்கிப் போகிறார்கள். அப்படி மூழ்கியதால்தான் அவர் வரவில்லை; வராமலேயே இருந்து விட்டார், அம்மா போன பின்னும்.

அவ்வளவு ஏன், என்னையே எடுத்துக்கலாம். அறுபது வயசாகிறது; இதில் இருபத்தியிரண்டு வருடம்தான் ஊரில் இருந்தேன்: மீதி முப்பத்தியெட்டு வருடம் சென்னை வாசம்தான். ஆனாலும் முப்பத்தியெட்டு வருடத்தை இருபத்தியிரண்டு வருடம்தான் ஜெயித்துக் கொண்டிருக்கிது; அதுதான் என்னையும் காந்தம் போல இழுத்துக் கொண்டிருக்கிறது.

ஊரிலே அது பெரிய இரண்டு கட்டு வீடு. பின்கட்டில் ஒரு குடித்தனத்தை ஏற்பாடு செய்து வைத்தேன். மூப்பனார் சத்திரத்தில் சமையல் வேலை செய்யும் மணி அய்யரை குடியமர்த்தினேன். அவர், மனைவி, 9 வயது பெண் என மூவர் அடங்கிய திட்டமிட்ட குடும்பம்.

அப்பாவின் சாப்பாடு பிரச்சனை தீர்ந்தது. மணி அய்யர் தானே சமைத்து கொடுத்திடுவார். எல்லாம் அப்பாவின் விருப்பத்தை அறிந்து பூர்த்தி செய்யும் விதமாக செய்திடுவார்.

மெல்ல மெல்ல நரை, திரை, மூப்பு என்று வந்து கடைசியில் சாக்காடும் வந்து விட்டது.

எல்லா காரியத்தையும் நிறைவேற்றிவிட்டு, ஊருக்கு வரும் போது மணி அய்யரிடம் சொல்லி வந்தேன்,

"அண்ணா, காலியா இருக்கிறதேன்னு முன் கட்டை யாருக்கும் வாடகைக்கு தர வேண்டாம். அது முழுக்க அப்பாவோட மூச்சும், வாசமும் நெறைஞ்சு கெடக்குது."

அருண் வளர்ந்து விட்டான். என்ஜினியரிங் முடித்து யு எஸ் ஸில் வேலை. இத்தனை ஆண்டுகளில் கிரீன் கார்டு வாங்கிட ஏற்பாடு நடக்கிறதாம். அவன் மனைவியும் அங்கே வேலை செய்கிறாள். ஓகோ என்ற சுக ஜீவனம்.

அருண் நேற்றுதான் பிறந்தது போல இருக்குது. அவனுக்கு முப்பத்திரெண்டு வயசாகிட்டது. அவன் பிள்ளைக்கு ஏழு, பெண்ணுக்கு ஐந்து வயசாகுது. சரியான குடும்பி யாகி விட்டான்.

அவன் இனி இந்த மண்ணுக்கு வர்ரது நடக்காதது. அவனை எதிர்நோக்கி காத்துக் கெடப்பதுவும் பலனளிக்காது.

இருபது நாள் லீவில் அருண் குடும்பத்தோடு வந்திருந்தான். எனக்கும் ஹேமாவுக்கும் பொற்காலமாக பொழுது போனது. எங்களிருவரையும்

யு எஸ் வரும்படி அழைப்பு விடுத்தான். டூரிஸ்ட் விசா ஏற்பாடு செய்கிறானாம். நான் முடிவேதும் சொல்ல வில்லை. வந்தவர்கள் நேற்றே கிளம்பி விட்டார்கள். எங்களுக்கு பொற்காலம் போய் கற்காலமாகி விட்டது. எங்களுக்குள் பேசிக்க எதுவுமே இல்லாமல் போய்விட்டது.

சென்னையிலிருந்து 109 ரயிலில் சொந்த ஊர் நோக்கி போய்க் கொண்டிருந்தோம்.

ரயிலில் படுத்தபடியே இன்றைய நிகழ்வுகளை அசை போட்டேன்.

காலிங் பெல் அடித்தது. கதவைத் திறந்தால் புரோக்கர். ஒரு கேரி பேக்கில் பணம் கொடுத்து சரி பார்க்கச் சொன்னார். எண்ணிப் பார்த்து,

"சரியாயிருக்கு" என்றேன்.

ரெண்டல் அக்ரிமென்ட் கொண்டு வந்திருந்தார்; கையெழுத்து போட்டுக் கொடுத்தேன்.

அவர் போனதும் பெயிண்டர் வந்தார். " ரெண்டுநாளில் முடித்து சாவியை புரேக்கரிடம் கொடுத்து விட்டு பாக்கிப் பணம் வாங்கிக்க" ச் சொன்னேன்.

சிறிது நேரத்தில் பேக்கர்ஸ் அண்டு மூவர்ஸில் இருந்து ஆட்கள் லாரியுடன் வந்திருந்தார்கள். அவர்கள் வேலையை முடித்து மாலையே கிளம்பி விட்டார்கள்; விடியற்காலை ஊரில் இருப்பார்கள்.

நானும் ஹேமாவும் ஒரு ட்ராலி பேக்குடன் இரவு 109 ரயிலில் கிளம்பினோம்; கபிஸ்தலம் நோக்கி.

என் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா எல்லாரும் அடக்கமான காவிரிக் கரையில் அடங்கிட.

என் அப்பாவின் வாசத்தை முகர்ந்திடவும், சுவாசத்தை உணர்ந்திடவும்.

# கவிஞர். தக்ஷன், தஞ்சை கவிதை

**மஞ்சள் புன்னகைகள்**

*இந்தப்*
*புங்கை மர நிழல்*
*என் வெளிர் நீல சட்டை முழுதும்*
*புதிய வடிவங்களை*
*நொடிக்கொரு முறை*
*வரைந்து கலைக்கிறது...*

*நீ*
*அருகாமையில் வந்துவிட்டதாக*
*தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கும்*
*குறுஞ் செய்திகளின்*
*இறுதியில்...*

*தவறாமல்*
*புன்னகைக்கிறது*
*மஞ்சள் வட்ட முகமொன்றும்...*

*அசைவுறும் இலை நிழல்களும்*
*இசைந்து துள்ளும் குறுஞ் செய்திகளும்*
*போதுமானதாக இருக்கிறது*
*நீ வரும் வரை...*

*வந்து சேர்ந்ததற்கான*
*தாமதக் காரணங்களை*
*அடுக்கும்போது*
*உனக்குப் பரிசளிக்க*
*இப்போது*
*என்*
*கை நிறைய வைத்திருக்கிறேன்*
*மஞ்சள் புன்னகைகளை*



# பெ. விஜயலட்சுமி துளிப்பாக்கள்

மது அருந்தினான் கணவன்
மயங்கி விழுந்தாள் மனைவி
குடும்பச் சுமை


❑

உதிரும் சருகுகளுக்கு
தாய்மடியானது
மரத்தடியில் புத்தர்

❑

கட்டி தழுவிக்கொண்டே
நெடுஞ்சாலைக்கு வழிவிடுகிறது
எதிரெதிரே மரங்கள்

▶



# அர்ஜுன்.சண்முகம் கவிதை

**மயங்கும் வெயில் சுழிகள்**

கிளைகளும் இலைகளுமாய்
அடர்ந்த மரத்தின் கீழ்
கொழுத்த நிழலில் புள்ளி வைத்துவிட்டு
கோலம் போட மயங்குகின்றன
வெயில் சுழிகள்

அதற்குள் மேய்ந்துவிட்டன
பொழுது சாய்ந்து
பட்டிக்குத் திரும்பும்
அரைப் பட்டினி ஆடுகள்

மழைத்தூவிகள் மரக்கிளைகளிலும்
மரக்கிளைகள் மரத்தடியிலும்
வாசல் தெளித்து காத்திருக்கிறது
இன்று கூடவே காத்திருக்கிறது
மரப்பட்டையிலிருந்து
மண்ணிறங்கிய எறும்புகளும்.

▶

● சந்திரா மனோகரன்



# ஓருயிர்

இந்த உலகம் அலாதியானது! அதன் பொலிவு பரபரப்பு அதிசயம் வேடிக்கை எதுவுமே நரேனைக் கவரவில்லை. ஆனால் அவனுடைய நண்பன் தருண் மாறுபட்டவன்.

மாலை வெயிலில்... நடைப்பயிற்சியின் போது நரேனை திசை திருப்ப எத்தனித்தான். 'வாழ்க்கையை ரசி! ஒருமுறைதானே வாழப்போறோம்' என்றான் தருண்.

'ம்ம்.. ஊகூம்' ஸ்ரீ

அசுவாரசியமாய் காணப்பட்டான் நரேன்.

'வா ஒரு நாள் உச்சிக்குப்போவோம்.. அதோ அங்க தெரிது பார் மலையுச்சி!'

தொலைவில் விச்ராந்தியாய்க் கிடக்கும் பசும் மலையைக் காட்டினான் தருண்.

'அங்கே என்ன இருக்கு?'

மீண்டும் சலிப்புடன் நரேன்.

'உனக்கு இயற்கையுணர்வே கிடையாதா? தாகூர்இ ஷெல்லிஇ வோர்ட்ஸ் வொர்த் விட்மன் எல்லாம் படிச்சதில்லையா? இவங்க எல்லாம் இளம்வயசிலே இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெற்றவர்கள்தான்' ஸ்ரீ தருண்.

'இருக்கட்டுமே!' ஸ்ரீ நரேன்.

'புத்தருக்குக்கூட இந்த அனுபவம் கிடைச்சதாப் படிச்சிருக்கேன். அவர் அரசை உதறித்தள்ளிட்டு காட்டுக்குப் போனாராம். அங்கே ஓர் ஆச்சார்யரைப் பார்த்தபோது 'நான் சிறுவயசுலே ஒரு மரத்தடிலே அனுபவிச்ச அனுபவம்...

அந்த ஆனந்த அமைதி... மீண்டும் நான் எப்படிப் பெறுவது?'ன்னு கேட்டாராம்... இப்பச்சொல்லு' என்றான் தருண் ஒரு வெற்றிப் புன்னகையுடன். நரேன் அமைதியானான். 'வாழ்க்கை வாலிபம் காதல்... எல்லாமே இனிது நரேன்!'.

'நீ சொல்றதுலே எனக்கு உடன்பாடில்லை தருண்' திடீரென்று சலசலக்கும் இலைகளினூடே அந்த வெளிச்சம். விழிகளைக் கூசச் செய்யும் ஒளித்திரள். இலந்தைப் பழங்களுக்குப் போட்டியிடும் இரு அணில்கள். தொலைவில் அழுகிற குழந்தையின் குரல். காட்டில் சுள்ளிகளைச் சேகரிக்கும் தாயின் பரபரப்பு. சலனமற்ற பெருங்கடலில் இறங்குகிறதுபோல்...

'நரேன்.. நரேன்!'

அவன் ஒரு மரக்கட்டையைப் போல் அவதானித்திருந்தான்.

'உன் மனசில் என்னதான் இருக்கு?'

'அதைக் கண்டுகொள்ள உனக்கு ஓர் அகத்தேடல் வேண்டும் தருண்!'

'நீ ஓர் அபூர்வம்! மனதைப் புறத்திலிருந்து அகத்துள் செலுத்தி ஆன்மாவை அறியத் துடிக்கும் விவேகி!'

ஓர் ஆழ்ந்த அமைதி தவழும் நேரம்.

'தருண்! நீ என் அத்தியந்த நண்பன்... எனக்கு ஏற்பட்ட ஓர் இன்பானுபவத்தை உன்னிடம் சொல்லவேண்டும். கேட்பாயா?'

'சொல்லு நரேன்.. ஒரு மலரின் இதழ்கள் மெல்ல அவிழ்க்கப்படுவதுபோல் அவை அமையட்டும்! இது ஒரு பொன்னான நேரம்தான்.. சொல்லு!'

‘ஒரு நாள் தியானப் பயிற்சியிலிருந்தேன். தியானம் கலைந்ததும் ஓர் ஆசனத்தில் தாபரித்திருந்தேன். அப்போது திடீரென்று என் விழிகள் கூசத் தொடங்கின. எதிரில் ஓர் உருவம் ஒளிக்கற்றைகளைத் தரித்துக்கொண்டு! அமைதிப் பேருருவில் ஒழுகும் பேரொளி! சலனமற்ற பார்வை. தாகூரைப் போன்ற வெண்ணிற தாடி. தலை நிறைய அடர்கேசம். கையில் கமண்டலமும் சிறுதடியும். என்னை அழைத்துப் பேச விரும்புவது போல் சைகை. நானோ பேச்சுமூச்சற்று பனிக்கட்டிபோல் உறைந்து நின்றேன். என் மேனியெங்கும் நடுங்கவைக்கும் அச்ச உணர்வு. அவர் புன்முறுவல் ஏனோ என்னை பயமுறுத்தியது! திகிலுடன் திரும்பிப்பார்த்தவாறு ஓடிவந்துவிட்டேன். அவரோ எனக்காக இன்னமும் காத்திருக்கிற ஒரு விசித்திர உணர்வு என் அகத்துள் சதா துன்புறுத்திக் கொண்டேயிருக்கிறது. அப்படி… நிர்த்தாட;சன்யமாய் ஓடிவந்துவிட்டது எவ்வளவு பெரிய அறிவீனமென்று இப்பொழுது நினைத்து நினைத்து வருந்துகிறேன்’.

‘அப்படியா? அது யாராயிருக்கும் நரேன்?’ தருண் வியந்துகேட்டான்.

‘யோசித்துப் பார்த்தேன்.. அது… இல்லை அவர் நிச்சயம் புத்தர்தான்!’

தருண் நிதானமாய் நகைத்தான்.

‘எனக்குத் தெரியும் நீ சிரிப்பாய் என்று… அவர் கனவில் வேறொருஉலகம் ததும்புகிறது… கண்ணுக்குத் தெரியாதது… எவருக்கும் புரியாதது… யாருமே அறிந்திராத அந்த உலகத்திற்கு அவர் போக வேண்டும்… புதிய செய்தியை அங்கிருந்து மக்களுக்குச் சொல்லவேண்டும்..

‘ நரேன்…அது ஓர் அழகான கனவு!’

ச்அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும்…’இனிமேல் என்னைத் தேடாதே… நான் திரும்பவும் அங்க போறேன். நீ சொன்னதுபோல் அதுவும் ஒரு மலையுச்சிதான்!’

தருண் திகைத்துப்போய் நின்றான்.

‘தருண்! நீ என்னை அளவுகடந்து நேசிக்கிறாய்… நான் ஒன்று கேட்பேன் செய்வாயா?’

தருண் தயங்கினான். பின்வாங்கினான் ஒரு செல்லப் பிராணியைப்போல்.

‘என்னுடன் நீயும் அங்கு வருவாயா? ஒரே ஒரு தடவை’

‘உன் வழி தனி வழி நரேன்! . என்னை விட்டுவிடு. இருந்தாலும் உனக்காக ஒரு தடவை மட்டும். அந்த தியானப் பயிற்சிக் கூடத்துக்கு வருகிறேன். அங்கு நீ என்னை எதுவும் கட்டாயப்படுத்தக் கூடாது. எல்லாவற்றையும் கூர்ந்து கவனிக்கும் ஒரு செடி போல் நான் நின்றுகொள்ளுகிறேன்!’

‘சரி.. உன் பிரியம்‘

அன்று பெருமழை வனத்தைத் துவட்டி எடுத்துக்கொண்டிருந்தது.

இருவரும் சென்றுகொண்டிருந்தது, ஒன்றையடிப் பாதையாக இருந்தாலும் சற்றே அகன்றிருந்தது. சேறும் சகதியும், குண்டும் குழியுமாக இருந்த பாதையில் பாதம் வலிக்கப் போய்க்கெர்ண்டிருந்தனர்.

நரேன் நண்பனை ஓரக்கண்ணால் கூர்ந்து கவனித்துக்கொண்டே வந்தான். அவன் நடையில் மிகுந்த சிரமம் தெரிந்தது. ஆனாலும், அவன் தரிசிக்கப்போகும் ஒரு

பரவச நிலைக்கு, சில இ;ன்னல்களை அனுபவிப்பதில் என்ன தவறு?

ஆனால், தருண் மனதில் இருப்பதை யாரறிவார்? ஓரிடத்தில் அவன் கால்கள் இடறி சேற்றில் விழப்போனான். மெல்ல அவனைக் கைத்தாங்கலாக அணைத்துக் கொண்டே இருவரும் மடத்தின் அருகே வந்து சேர்ந்தனர்.

சற்று தூரத்தில் கண்ட காட்சியில். தருண் வியப்படைந்தான். சில வெளிநாட்டு சிஷ்யைகள் துறவியின் கால்களை, குவளை நீரால் கழுவுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தனர். ஆனால் அது நடக்கவில்லை. துறவி அவர்களைக் கடிந்துகொண்டார்.

நான் தான் உங்கள் கால்களைக் கழுவ வேண்டும்... பாதங்கள் சேற்றினால் அழுக்கடைந்திருக்கின்றன... இருங்கள்... நான் சுத்தம் செய்துவிடுகிறேன்.

அவர்கள் திகைத்துப் போய், அவரிடமிருந்த நீர்க்குவளையைப் பறித்துக்கொண்டனர்.

ச்சுவாமி...நாங்கள் உங்கள் சிஷ்யைகள்... நீங்கள் இப்படிச் செய்வது சரியல்ல..

அவர் சிரித்துக்கொண்டே ச்நீங்கள்தான் எனக்கு ஆசான்... நான் உங்கள் மாணாக்கன்க்.. என்றார் பணிவுடன்.

மடத்தில் ஆங்காங்கே வந்தவர்கள் அமர...துறவி பேச ஆரம்பித்தார்.

'மனித வாழ்க்கையில் வாலிபம் ஒரு முக்கியப்படி. இந்தப் பருவத்தில்தான் மனிதனிடம் தன்னுணர்வு மலர ஆரம்பிக்கிறது. படைப்பாற்றல் சுயமதிப்பு இயல்புணர்ச்சிகள் ஆகிய மூன்றும் இந்தப் பருவத்தில் வளர்ச்சியின் உச்சத்தை எட்டுகின்றன. இந்த மூன்றையும் சரியாக வளர்த்துக் கையாளத் தெரிந்தவன் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான். இந்த மூன்றுக்கும் அடிப்படையாக அமைவது தேடல். மனிதன் தேடவேண்டும். எதையாவது சாதிக்க வேண்டும் என்று உறுதி கொள்ளவேண்டும். குறிக்கோளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அந்தக் குறிக்கோளை நோக்கி இந்த மூன்றையும் செலுத்தவேண்டும்.'

துறவி தொடர்ந்துபேசிக்கொண்டிருந்தார். அருகேயிருந்த குவளை நீர் குறைந்து கொண்டேஇருந்தது.

ச்முதலில் அனுபவங்களைப் பெறவேண்டும்....பிறகு சிந்திக்க வேண்டும்... அப்புறம் செயல்படவேண்டும்.

இதைத்தான் சாத்திரமும் ச்சரவணம் மனனம் நிதித்தியாஸனம.. என்கிறது...

நரேன் தன்னையிழந்தான். விவரிக்க இயலாத ஓர் அகநாட்டம் அவனுக்குள் இழைந்து முகிழ்த்தது. 'ஒருவனிடம் எத்தனையோ பண்புகள் இருக்கலாம். எத்தனையோ ஆற்றல்கள் வெளிப்படலாம். எத்தனையோ திறமைகள் திகழலாம். அவை அனைத்தினும் பின்னிக்கொண்டுஇ அனைத்தின் ஊடேயும் குறிப்பிட்ட ஒரு பண்பு ஒரு தனித்தன்மை இழையோடும். அந்தத் தனிப்பண்பே அவன் யார் அவனது வாழ்க்கை எப்படியிருக்கப்போகிறது என்பதை நிர்ணயிக்கும்'

அந்த விவேகி தொடர்ந்து முழங்கிக் கொண்டிருந்தார். நரேன் வாழ்க்கையில் அகத்தில் காணும் ஓர் அதிசய நிலையையடைந்தான்.

திடீரென்று பெற்ற புறவிழிப்புணர்வில்இ நண்பனை அருகில் தேடினான்.

'தருண்.. தருண்!'

அவன் தியானப் பயிற்சிக் கூடத்தைவிட்டு ஏற்கெனவே கடந்து சென்றுவிட்டிருந்தான்.

தருண் !

பிரேமை நிறைந்த இளமைக்காலம் அவனை ஓர் அதிர்ஷ்டசாலிக்கியிருந்தது. பிருந்தாவனத்தில் கண்ணனும் கோபியரும் ஆடிக்கும்மாளம்போட்ட பிருந்தாவன லீலையை ஒத்திருந்தது அது.

ராதையின் பக்தியில் தோய்ந்த விவேகானந்தரின் கூற்றுப்படி 'அப்போது கறந்த பாலில் தோன்றும் நுரைபட்டால்இ உன் விரல் வெட்டப்படுமா? ஒருவேளை அதுகூட சாத்தியமாகலாம். ராதையின் இதயம் அதைவிட மென்மையானது!' என்பதுபோல்.

ருக்கு!

அவன் மனசைக் கிளறிவிட்டாள். பணம் பதவி செல்வாக்கு.. எல்லாமே ஓரிடத்தில் அவன் பாதங்களுக்கிடையில் குவிந்துகிடந்தது போல் ஒரு வினோத உணர்வு. அவன் மந்திரத்தால் கட்டுண்டதுபோல் கிடந்தான்.

கனவில் கண்ட மாயை பூசிய கிளர்ச்சி நிறைந்த அனுபவங்கள் சடுதியில் அவனை அடித்துப்போடும் என்று சிறிதும் எதிர்பார்கவில்லை.

ஆனால் நரேன்...?

ஒரு நாள் தருணிடம் சொல்லிக்கொண்டிருந்தான். 'ஒரு பணக்காரப்பெண் என்னை விடாமல் துரத்திக்கொண்டிருந்தாள். செல்வத்தையும் தன்னையும் ஏற்றுக்கொண்டுஇ வறுமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும்படி செய்தி அனுப்பினாள். நான் கடுமையாக நிராகரித்தேன். அவள் மட்டுமில்லை. இன்னொருத்தியும் குறுக்கிட்டடாள். நான் என்ன சொன்னேன் தெரியுமா? 'பெண்ணே ஒரு பிடிசாம்பலாகப் போகின்ற இந்த

உடலின்பத்திற்காக இதுவரை என்னவெல்லாமோ செய்துவிட்டாய்! இதோ மரணம் உன்முன் உள்ளது அதனை எதிர்கொள்ள நீ ஏதாவது செய்திருக்கிறாயா? கீழான எண்ணத்தை விட்டுவிடு. இறைவனைக் கூவி அழை' என்று சொன்னேன்.

தருண் பதிலடி கொடுத்தான்.

'நரேன்! என் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருக்கிற உணர்ச்சிப் பிரவாகத்தை என்னால் அடக்கமுடியவில்லை. அவள் பெரிய பணக்காரி. செல்வச்செழிப்பும் சமுதாயத்தில் இருக்கிற மதிப்பும் கௌரவமும் என்னை மயக்கிவிட்டது நரேன்! குடும்பம் என்பது இந்த உலகத்திலேயே மிகவும் பழைமையான அமைப்பு... அதனைப் பராமரிக்கவும் அதன் மடியில் பிறக்கிற இன்பங்களை அனுபவிக்கவுமே மனிதன் பிறந்திருக்கிறான். தத்துவங்களும் கோட்பாடுகளும் மனிதன் மனத்தில் அவ்வப்போது எழத்தான் செய்யும். என்னைப் பொறுத்தவரையில் என் வறுமைக்கு ஒரு விடிவுகாலம் பிறக்கவேண்டுமென்றால் அவளை... பேரழகி ருக்குவை ஏற்றுக்கொள்வது ஒன்றுதான் வழி!'

நரேன் சிரித்துவிட்டுச் சொன்னான்.

'திருமணம் என்பது ஒரு தவம் மாதிரி. அந்தப் பின்னணியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும். ஒரு தவம் செய்கிறோம் என்ற கருத்தைத்தவிர மற்ற அனைத்தையும் விட்டிருக்கவேண்டும். ஒரு துறவி தனது வாழ்க்கையையே ஒரு வேள்வியாக ஒரு வழிபாடாகக் கருதவேண்டும் என்பதைப்போல்!'

கோடை... மழை... இலையுதிர் என்று காலம் இயற்கையின் படுக்கையில் புரள்வதுபோல் மாறிமாறிப் புரண்டு கொண்டிருந்தது.

மனதில் எந்தக் கவலையும் பரவச நிலையுமில்லாமல் ஒரு பட்டாம்பூச்சியைப்போல் இலகுவான வாழ்க்கையில் திளைத்திருந்தான் நரேன்.

தியானம்.. இறைவழிபாடு எனப் பொழுதுகள் தேனாய்க் கரைந்து கொண்டிருந்தன.

அந்த மாலைவேளை வித்தியாசமாய்ப் பூத்தது. தியானக் கூடத்தைவிட்டு சற்று வெளியே வந்ததும் நரேன் திரும்பிப் பார்த்தான்.

அதே புன்னகை.. அதே பேரொளி!

அந்தத் துறவி மெல்லப் புன்முறுவலித்தவாறு வந்திருந்தார். தூய்மையும் பசுமை ஒளியும் ததும்பி வழியும் எல்லையற்ற வெளியில் நரேன் சிறிது தூரம் காலாற நடக்கவாரம்பித்தான். மனதை மயக்கும் நிலவின் மெல்லொளி.

இயற்கையின் ஆராதகனாகத் திகழ்ந்த நரேன் மாறிமாறிவரும் காட்சி விந்தைகளில் ஒன்றி ரசித்துக் களித்து நின்றான்.

மனித சஞ்சாரமற்ற பாதையில் கொத்துக்கொத்தாய் அசைந்தாடிக்கொண்டிருக்கும் பசும் இலைகளை விலக்கியவாறு அவன் முன்பு வந்து நின்றது ஓர் உருவம்.

தருண்!

அவன் இதுவரைக்கும் எதையெல்லாம் நம்பியிருந்தானோ அந்த செல்வாக்கு கௌரவம் கர்வம் மேட்டிமை பகைமை துரோகம் வெறுப்பு அத்தனையும் திரண்டெழுந்து ஒரு பூச்சியைப் போல் அவனை விரட்டியனுப்பிவிட்டிருந்தது.

நரேனின் இருகரங்களையும் தருண் ஆர்வம் பொங்க பற்றிக் கொண்டான்.

'நரேன்! நீ ஒரு பண்டிதன். இந்த உலகையே அசைக்கவல்ல ஆற்றல் உன்னிடமிருக்கிறது. ஆனால் நான்?

ச்குழப்பம் நிறைந்த நீண்ட இரவுகள் விலகுகிற மாதிரி உணருகிறேன். எல்லாமே முடிவுக்கு வந்தாயிற்று. இனி எந்த புறசக்திகளும் என்னை அடிமைப்படுத்த முடியாது. உன் குருவின் காலடியில் எல்லையற்ற ஆற்றல் இருப்பதை இந்தக்கணமே உணருகிறேன், தருண் க்

'இப்பொழுது... குரலற்றவனாய் உம் முன்பு நிற்கிறேன்! நானும் உன்கூட அந்த தவபூமிக்கு வரட்டுமா? உன் தயக்கம் எனக்குப் புரிகிறது. இனிமேல் உன்னைவிட்டு எங்கும் போகமாட்டேன். என்னை நம்பு நரேன்!'

ஒரு யோகியைப் போன்ற நரேனின் விழிகள் நண்பன் தருணைப் பார்த்து விகசித்தன. ▶

# கவிமலர் த.சரண்யா கவிதை

**வெட்டப்பட்ட மரங்கள் பேசினால்?**

*ஏதோ மூலையில் எருக்கஞ்செடியருகில் எப்படியோ முளை விட்டிருந்தேன்.*
*சுற்றுச்சூழல் தினமென்று விழா வைத்து வியாக்கானம்பேசி.. சாலையோரம் நட்டுவிட்டு என்னை நெகிழிக்குப்பைக்குள் விட்டுவிட்டு போனதினால் கதியற்று நின்றேனே..!*
*அவ்வப்போது தாகம் தணிக்க,*
*மேகத்தின் கருணையே பிரவாகம் எடுக்க,*
*நிலத்தோடும், தார்சாலை நெரிசலிலும் வானளாவி நின்றேன்..!*
*அத்துணை நாள் அறியேன்..,*
*என்றொரு நாளோ எங்களுயிர் தனித்தனியாய் பிரித்து எடுக்கப்படுமென..!*
*என்னுடல் தொழிற்சாலைக் கதவிற்கு தேவையாம்,*
*தட்டாமல் அறுத்துச் சென்றனர்..!*
*அறுத்துக் கொண்டிருக்கையில்*
*என் சகநண்பரின் கோபமெல்லாம் சிறுசிறு சுள்ளிகளாய் அவர்கள் மேல் கொட்ட, அதுவரை அறிந்திடா தனக்கும் இந்நிலையென!*
*அன்னையிடம் பறித்த மழலையை போல்*
*துடி துடித்து நின்றதென் புவியன்னை..!*
*மழைவேண்டி நின்றபோதெல்லாம் வளர்க்கப்பட்டு,*
*இன்று இறுதி ஊர்வல பாடையாய் மட்டுமல்ல,*
*உடனெரியும் கட்டையாய் உன்னோடு சாம்பலானேன்..!*
*தாயை வெட்டும் மடையனே,*
*நீரையும் காற்றையும் அலட்சியப்படுத்தி, அடியோடு அறுத்தென்னை ஆனந்தம் காண்கிறாய் நீ.,*
*குப்பி தண்ணீரை விளம்பரப்படுத்தி என்மீது ஆணியடிக்கும் வண்ணக் காகிதத்தில்..,*
*உன் சாயம் அறியாமல் நீ..!*
*வாயு விற்பனையென்றால் நீயொட்ட காகிதம் கூட இருக்காது என்னைத் தொலைப்பின்..!*

# பிருந்தா சாரதி கவிதைகள்

தலைக்கு மேல்
மீன்கொத்தி
துள்ளும் கெண்டை
நதியில்
யாருக்குப் பரிவு காட்ட?

❑

வாயுள்ள பிள்ளை
பிழைத்துக்கொள்ளும்
சிலந்தியிடம் கற்றேன்.

❑

பூந்தொட்டி ஆகிறது
குப்பைத் தொட்டி
விற்காத நேற்றைய பூக்கள்.

❑

பெரிய தட்டான் அமர்ந்தும்
அலுங்கவில்லை நலுங்கவில்லை
சிறிய புல்.


❑

அண்ட சராசரங்கள்
தோன்றி அழிகின்றன
குழந்தைகள் ஊதும்
சோப்புக் குமிழிகளில்.

❑

மூன்று கண் மோனத் தவம்
மட்டைக்குள் மறைவாய்
தேங்காய்.

❑



அசையாமல் நிற்கிறது கொக்கு
அப்படி இல்லை
அதன் பிம்பம்.

❑

வைக்கோல் வண்டியை இழுத்துச் செல்கின்றன
வயிறு ஒட்டிய மாடுகள்.

❑

கல்லெல்லாம்
கூழாங்கல்
ஆகுமா?

❑

மரம்போல் நிற்கின்றன
மரங்கள்
நிலவு நுழைந்த காடு.

# வேதா. இலங்காதிலகம் கவிதை

**உயிரின் நிலா!**

*பரிசுத்த நெருப்பு! ஆதித் தீ!*
*பகர்ந்திட வியலாத சக்தி*
*பங்கமற்று உலகைப் புரட்டும்*
*புது ஊற்று உத்வேகமுடையது*

*உணர்ச்சியின் மொழி வெளிப்பாடு*
*புணரி (கரை) காணாத தேடலிது*
*பிணக்கம்கொள்ளா இணக்கமிது*
*புணர்கிறேன் நேசிப்பான அவத்தையை*


*தோன்றும் நுட்பமான கருத்து*
*ஊற்றெடுத்துப் பயன் கூட்டும்*
*நிற்காத நீரூற்று கவிதை*
*வற்றாது விழுவதேயதன் வேலை*

*கவிதைகளைப் பகிரக் கனகச்சிதமான*
*கவிதை மனம் வேண்டுமிது*
*பூவிதையான நுண்ணிய உணர்வு*
*பூவாக விரியும் மனம் நரைக்காது*

*எண்ணங்கள் கனத்த மனதால்*
*வண்ணக் கவிதைச் சுருளெழும்*
*திண்ணமாய் வெற்றியெட்ட வேண்டி*
*பண்ணட்டும் தொல்லைகள் உன்னுள்.*

*உயிரின் நிலா கவிதை!*
*பயிராவது புதிதாயரும்புவது மகிழ்வு!*
*வயிரச் சொல் மணிமாலை*
*உயிர்பிக்கும் நாளும் தமிழுலகை*

● மு. சிவலிங்கம்



# ஒரு துப்பாக்கியின் கண்ணீர்

ஜெய்ப்பூர் செயற்கை காலைப் பற்றி முகிலன் குறைபட்டுக் கொண்டிருந்தான். “சீனாவில் நவீன தொழில் நுட்பத்தில் செயற்கை கால்கள் செய்யப்படுகின்றன..” என்ற பத்திரிகை செய்தியைக் கேள்விப்பட்டவன், அவன் எதிர்பார்க்கும் தொழில் முறையில் கால்கள் செய்யப்படுவதில்லையே .. என்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தான். நாட்டில் ஆயிரக் கணக்கில் கால்களை இழந்தவர்கள் இருக்கிறார்களே.. அவர்களுக்கெல்லாம் நான்

எதிர்பார்க்கும் கால்கள் கிடைத்தால், எவ்வளவு சந்தோசப்படுவார்கள்..? அவன் மனம் மேலும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தது..

காலைக் கழற்றி மரத்தடியில் வைத்து, சுத்தம் செய்தவன், தனது கைப்பிடியை ஊன்றி எழுந்து நின்றான். அவனது மூலித் தொடை நன்றாக இரத்தச் சிவப்பேறியிருந்தது. வதனி வெதுவெதுப்பான சூட்டில் அவளது ஒரு கையினால் ஒத்தடம் கொடுத்தாள்.

வழமையான ஜெய்ப்பூர் கால்கள் பாதத்திலிருந்து முழங்கால் வரை அல்லது தொடை வரை ஒரே அச்சாகத்தான் வார்க்கப்பட்டிருக்கின்றன. அதை மாட்டிக் கொண்டு நடக்கும்போது, இடுப்பு நோவதையும், தொடைப் பகுதி நோவதையும் முகிலன் வதனியிடம் சொன்னான். இயற்கை உறுப்புகள் இயங்கி ஒத்துழைப்பது போல , செயற்கை உறுப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதை வதனி ஒரு ஆஸ்பத்திரியில் பார்த்த படம் ஒன்றை ஞாபகப் படுத்தினாள். கணுக்காலுக்கும் முழங் காலுக்கும் ஷொக் எப்சோபர் என்ற அதிர்ச்சி தாங்கி அமைக்கப்பட்டிருந்ததாம். அதை மாட்டிக் கொண்டால், தோள் தாங்கி இல்லாமல் மெதுவாக நடக்கலாம் என்பதையும் அன்றே ஒரு செவிலியர் மூலம் கேட்டறிந்து கொண்டாள். அந்த நினைவு மனதில் வரவும் மெதுவாகப் புன்னகை செய்தாள். துயரம் தோய்ந்திருக்கும் அவளது முகத்தில் புன்னகை இழையோடியதைப் பார்த்த முகிலன் ஆர்வத்தோடு கேட்டான். அவள் அந்த விபரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இருவரும் போராளிகளானவர்கள்.. புனர் வாழ்வளிக்கப்பட்டவர்கள்.. பாதுகாப்புத் துறையினர் விரும்பிய போதெல்லாம் விசாரிக்கப்பட வேண்டியவர்கள்.. முகிலன் வதனியைக் கண்டு கொண்ட சம்பவம் ஒரு தமிழ் திரைத்துறைக் கதையைப் போன்றது. வேப்பங் குளத்திலிருந்து , கிளிநொச்சிக்குப் போய் நண்பன் பக்த சிங்கை சந்திப்பதற்குப் புறப்பட்ட ஒரு பயணம் அது.. "முகிலன்," "பகத் சிங்" என்பதெல்லாம் இயக்கப் பெயர்களாகும்.

பேருந்தில் ஏறி நின்றவனுக்கு நொண்டி என்றுகூட இரக்கப்படாமல், எவரும் எழும்பி நின்று இடம் கொடுக்க வில்லை.. ஒருவரையொருவர் பார்த்துச் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் மத்தியில், ஒரு பெண் மட்டும் எழுந்து நின்று ஆசனம் கொடுத்தாள். எழும்பி நின்றவள், ஒரு கையினால் தாவி மேல் பைப்பைப் பிடித்துக் கொண்டாள். அவளுக்கு ஒரு கை மட்டுமே இருப்பதைக் கண்ட முகிலன், அவளை வற்புறுத்தி அமர வைப்பதில் தோல்வியடைந்தான். அவள் அவனைப் பிடித்து தோள் பிடியை வாங்கிக்கொண்டு உட்கார வைத்தாள். மனிதம் முற்றாக இன்னும் சாக வில்லையென்பதை பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒரு பெரியவர் உறுதிப் படுத்தினார். அந்தக் கை ஊனமடைந்த பெண்ணை பிடித்து தனது ஆசனத்தில் உட்கார வைக்க முயன்றார். அவர் வயதானவர்.. நின்றபடி பயணிக்க முடியாது.. அவள் மறுத்து அவரையே உட்காரச் செய்தாள். அவள் நின்று கொண்டே பயணம் செய்தாள். ஆண்களும், பெண்களுமாய் எத்தனையோ இளவட்டங்கள் அரட்டையடித்துக் கொண்டு அந்த பேருந்தில் பயணமாகிக் கொண்டிருந்தார்கள்...

தனக்கு ஆசனம் கொடுத்த மனித உணர்வுள்ள அந்தப் பெண்ணை, முகிலன் கூர்ந்து கவனித்து அதிர்ச்சியடைந்தான். "வதனி..!" என்று தன்னை மறந்து சத்தமிட்டான். குரல் கேட்டவள் திரும்பி "முகிலன்..!" என்று அவளும் சத்தமிட்டாள். பேருந்து வண்டி வேகமாகப் பறந்து கொண்டிருந்தது. "அடுத்த ஸ்டேன்டில் இறங்கப் போரன்.. எழும்புங்கோ..!" என்று அவனருகில் வந்து நின்றாள். "கிளிநொச்சிக்குப் போற பயணம்.. விலாசத்தை குடுங்கோ.. நாளைக்கு வாறன்.." என்றான். அவள் விட வில்லை. பலவந்தமாக அவனது கைப்பிடியை எடுத்துக்

கொண்டு, பக்கத்திலுள்ள வரை மணியடிக்கச் சொன்னாள். இருவரும் இறங்கினார்கள். இறங்கி நின்ற இடம் இரணைமடு.. ஆடாது, அசையாது வெகு நேரம் அதிர்ச்சியடைந்த நிலையில் ஒருவரையொருவர் கண் சிமிட்டாமல் வெறிக்கப் பார்த்துக் கொண்டு நின்றனர். வதனிதான் முதலில் சுய நினைவுக்கு வந்தவளாய் பேசினாள். "முகிலன்.. எங்கயிருக்கிற நீங்கள்..?" "நீங்க எங்க இருக்கிறியள்..?" இரண்டு கேள்விகளும் ஒன்றாக விழுந்தன. "புனர்வாழ்வு முகாமிலிருந்து வெளிக்கிட்ட என்னிட்ட சொந்த இடத்தை கேட்டார்கள்.. இடத்தைச் சொன்னான். இங்க இறக்கிவிட்டு போனவர்கள். ஆறு மாதமா இந்த ஊர்லதான் இருக்கிறன்.. "இது ஊர் இல்ல.. இப்பதான் ஊர் மாதிரி உண்டாகி வருது..!" அவள் நகைப்போடு அவனிடம் சொன்னாள். "என் கதையும் இதுதான்.. வேப்பங் குளத்தில இருக்கிறன்.." என்று அமைதியாக விரக்தி மேலிடச் சொன்னான். திரும்பவும் சொன்னான் "அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சி வாழ்ந்த ஊர்.. இப்போது ஊரையும் காணோம், ஒருவரையும் காணோம்.. தனிச்சிப் போய் ஒரு தகரக் கொட்டகையில போயிருக்கிறன்.." வதனி மெதுவாக நடக்கத் தொடங்கினாள். முகிலனும் பின் தொடர்ந்தான்.

இங்கே சிதைக்கப்பட்ட அனேகக் குடும்பங்கள் கொட்டில்கள் கட்டிக் கொண்டு, இழந்து போன வாழ்க்கையை மீண்டும் தேடுவதற்கும், உருவாக்கிக் கொள்வதற்கும் ஒரு புதிய கிராமச் சூழல் தோன்றிக் கொண்டிருக்கிறது.. வதனி முகிலனிடம் கதைத்துக் கொண்டு போனாள். புழுதி பறக்கும் கரடு முரடான அந்த செம்மண் பாதையில் முகிலன் கொஞ்சம் தடுமாறியபடி நடந்தான்.

வதனி அந்த அடர்ந்து படர்ந்த வேப்ப மரத்தருகில் வந்து நின்றாள். " இது தான் எண்ட தகர மாளிகை..!" என்று புன்னகை செய்தாள். அந்த தகரக் கொட்டகையின் அருகருகே நிறைய கொட்டில்கள் முளைத்திருந்தன. வாழைகள், தென்னைகள், எல்லாம் கன்றுகளாக வளர்ந்து கொண்டிருக்கின்றன.. புது விருந்தாளியோடு வதனி, தன் கொட்டில் அருகில் வந்து நிற்பதை அயலவர்கள் எல்லோரும் வந்து பார்த்தார்கள். "களத்தில என்னோடு இருந்தவர்..! பெயர் முகிலன். வேப்பங்குளத்தில இருக்கிறார்.." என்று எல்லா விபரங்களையும் சொன்னாள்.

வேப்ப மரத்தடியில் உட்காருவதற்கு மரக் குத்திகளால் வாங்கு செய்யப்பட்டிருந்தது. முகிலன் உட்கார்ந்து காலைக் கழற்றி வைத்து விட்டு, அரிப்பெடுக்கும் தொடையைத் தடவிக் கொண்டிருந்தான். வதனி ஒரு மண் முட்டியில் குளிர்ந்த நீர் கொண்டு வந்து கொடுத்தாள். அந்த வாங்கில் ஒரு புறும் அவளும் அமர்ந்துக் கொண்டாள். இருவர் மனதிலும் பழைய நினைவுகள் வந்து மோதிக் கொண்டிருந்தன. களத்து நண்பர்களையெல்லாம் பேர் சொல்லி சொல்லி விசாரித்துக் கொண்டிருந்தாள் வதனி. புனர் வாழ்வுக்குப் பிறகு, சொந்த இடங்களுக்கு வந்து விட்ட நண்பர்கள் பலரைப் பற்றி முகிலன் அறிந்திருந்தான். வதனி விசாரித்த அத்தனை பேர்களில் முக்கால் வாசி நண்பர்கள் சாவைத் தழுவிவிட்டார்கள் என்பதை முகிலன் வேதனையோடு சொன்னான். அதை நாங்கள் நோயினால் இறந்து போன மரணங்களாக ஏற்றுக் கொள்ள முடியாது.. அந்தச் சாவுகள் எல்லாமே வீரச் சாவுகள் என்று அஞ்சலி செய்ய வேண்டும்..! என்ற கருத்தை வெளிக்காட்டியபடி வதனி உரத்துக் குரல் கொடுத்தாள். " யுத்தத்தில சாகாமல், நோயில சாவது அவமானமாகவிருக்கு..!" முகிலனும் தளர்ந்த குரலில் பதிலுரைத்தான். அவர்கள் இருவரும் உணர்ச்சிவசப்பட்டு, உரையாடிக் கொண்டிருப்பதை வழியில் போய்க்கொண்டிருந்தவர்கள் ஏளனமாகப் பார்த்துச் சிரித்தபடி சென்றார்கள்.

போருக்குப் பின்னர், போராளிகள் மக்களால் மதிக்கப்படும் நிலை மாறாகவே இருந்தது.

யுத்தம் முடிந்து ஒரு யுக மாற்றம் நடந்து விட்டது போன்ற காலத்தின் பின்னர்.. உயிர் மிஞ்சிய துரதிஸ்டவசத்தால், மறுபிறவியாக ஊர் மக்களிடம் வந்து சேர்ந்த போது, அவர்களை உதாசீனமே வரவேற்றது.! அவர்கள் போருக்குப் பின்னரான ஒரு புதிய சமூகத்தின் மத்தியில் , அருவருப்புக்குள்ளானார்கள்.! மீண்டும் அவர்களால் ஆபத்து நேர்ந்து விடுமோ.. இன்னுமொரு போருக்கு ஆயத்தமாகி விடுவார்களோ.. என்ற பய உணர்ச்சிகள், அவர்களைத் தீண்டத் தகாதவர்களாக நினைக்கத் தோன்றியது. "மீண்டும் அவர்கள் ஒரு பிரச்சினை" என்று ஊர் மக்கள் அவர்களிடமிருந்து ஒதுங்கி வாழவே விரும்பினார்கள்.

முகிலன் பேச்சைத் தொடர்ந்தான். புனர் வாழ்வு,.. அதன் கண் துடைப்பு,..வரவேற்க மறுக்கும் சமூகம்... அலட்சியப் படுத்தும் அரசியல் தலைமைகள்.... இந்த சஞ்சலமான நிலையில் மிஞ்சிய காலத்தை நிம்மதியாக எப்படி நகர்த்துவது என்ற தர்ம சங்கடமான சூழ்நிலையை அவர்கள் இருவரும் ஒரே நேரத்தில் உணர்ந்தபடி ஒருவர் முகத்தை ஒருவர் நோட்டமிட்டனர். மௌனத்தை வதனி கலைத்தாள் "நீங்கள் அறிஞ்ச அளவுக்கு உசிரோட இருக்கிறவங்க எப்படி சீவியம் நடத்திறாங்கள்..?" "பெண் போராளிகள் கோழி வளர்ப்பு, தையல்,.. ஆம்பிளைகள் கூலி வேல, விறகு வெட்டி சீவியம்.. ஊருக்குள்ள இப்படி சீவியம் நடத்துறது ஒரு போராட்டந்தான். ஒரு சிலரே வெளிநாடு போயிருக்கினம்.". இப்பத்தான் அரசியல்வாதிகளும் எங்களப் பத்தி பேச வந்திருக்காங்கள்.! புதுசா வேலைத் திட்டம் ஆரம்பிக்கப் போவதாகவும் பேப்பர் செய்திகள் சொல்லுது...."

"கிளிநொச்சிக்கு அவசர அலுவலா போறீங்களா..?" வதனி கேட்டாள்.

"அப்படி அவசர அலுவல் ஒன்டும் இல்ல.. ஒரு நல்ல சங்கதி நடந்திருக்கு.. அதில கலந்துக் கொள்ளத்தான்..! நண்பர்கள சந்திக்க வேணும்.. புது வாழ்க்கை.. புதுக் கதைகள்.. புதிய அனுபவங்கள்.. என்டு கூடிப் பேசி ஒரு நாளையாவது சந்தோசமா கழிச்சிட்டு வரலாமென்டு ஒரு விருப்பம்..!" என்று முகிலன் மகிழ்ச்சியோடு சொன்னான்..

வதனியின் முகம் மலர்ச்சியடைந்ததைப் பார்த்து இன்னுமொரு விசயத்தையும் சொன்னான்.. "சொல்ல மறந்திட்டன்.. ஒரு சந்தோசமான செய்தி.. ஜான்சி ராணியும் நண்பன் பகத் சிங்கும் குடும்பமாகி ஒரு கொட்டில்ல இருக்கிறாங்களாம்..! அவனுக்கும் என்னப் போல ஒரு கால் கிடையாது, ஜான்சிதான் அவனுக்கு எல்லாமே என்டு துணையா நிக்கிறா.. இனி சாகிற வரைக்காவது பரஸ்பரம் துணைக்கென்று ஒரு சக உயிரோட வாழ்றதுக்கு எடுத்த முடிவு ஒரு சவால் என்டுதான் சொல்ல வேண்டும்.. காலமும் போச்சு.. உறவுகளும் போச்சு.. உடலுறுப்புகளும் போச்சு.. இந்த நிலமையில அவங்கள் தாம்பத்தியத்துக்காக ஒன்டு சேந்தாங்களென்டு கொச்சை படுத்திவிட முடியாது..! அது ஒரு புனிதமான பந்தம்..!" மிகவும் உணர்ச்சிவசப்பட்டு பேசிய முகிலனின் மனம் கலங்குவதை கண்கள் காட்டி விடும் என்று தயங்கியவன், வலிக்கும் ஊனக் காலை குனிந்து தேய்த்துக் கொண்டிருந்தான்..

" காலைக் கழற்றி வைக்கிறன்.. கொஞ்சம் ஓய்வெடுங்கோ.." அவளே உட்கார்ந்து ஒற்றைக் கையால் காலைப் பிடித்தாள். முகிலன் அவளின் தயவோடு காலைக் கழற்றி அருகில் வைத்தான். வதனி ராசவள்ளிக் கிழங்கு கஞ்சி காய்ச்சு இருந்தாள்.- சமையல் கட்டு.. இரண்டு மண் சட்டிகள், மற்றவையெல்லாம் பிளாஸ்டிக் தட்டு, கோப்பைகள்.. கோப்பையில் கஞ்சி கொண்டு வந்து முகிலனிடம் நீட்டினாள். " இங்க கொஞ்சம் பிள்ளைகளுக்கு படிப்பிக்கிறன்.. காசு வேண்ட மாட்டன். மரக்கறி, கீரை, கிழங்கு, பழங்கள் கொண்டு வந்து தருவினம். இங்கத்திய சில குடும்பங்கள் எனக்கு ஆதரவு.. பாதுகாப்பு..." அவள் முகத்தில் கொஞ்சம்

பெருமிதம் மிளிர்ந்தது. கஞ்சியைப் பருகியவன், அவள் முகத்தைப் பார்த்து கண் கலங்கினான். "அம்மான்ர ஞாபகம் கருகுது வதனி.." அவன் உணர்ச்சிவசப்படுவதை பார்த்த வதனி அருகில் வந்து ஆசுவாசப்படுத்தினாள். பதினைந்து வயதில் வீட்டை விட்டுப் பிரிந்தவன். அவசர அவசரமாக புத்தகப் பையை முதுகில் மாட்டிக் கொண்டு அந்தக் காலையில் அம்மா கொடுத்த ராசவள்ளிக் கிழங்கு கஞ்சிதான் அவனுக்குக் கிடைத்த கடைசி உணவு..

போராளிகள் அந்த பெரிய ட்ரக் வண்டியில் அவனைக் கடத்திக் கொண்டு போன காட்சியை மனதுக்குள் மீட்டிப் பார்த்தான்...

ஒரு யுகத்தின் மௌனமாய் அந்த தகரக் கொட்டிலுக்குள் அமைதி நிலவியது.. அந்த இளமைக் காலத்தில் போர் மூண்டு கொண்டிருந்த தருணத்தில் பயமறியா இளங் கன்றுகள்... உயிரோடு விளையாடிக் கொண்டு, ஒவ்வொரு பொழுதும்.. ஒவ்வொரு நாளும்.. மரணித்துக் கொண்டே உயிர்த்தெழுந்து நின்றவர்கள் எத்தனை நண்பர்களின் உடலங்களைச் சுமந்தனர்..? எத்தனை நண்பர்கள் தங்களது மடியில், தோளில் சரிந்து உயிர் விட்டனர்..? ஓர் இலட்சியத்துக்காக உடலையும், உயிரையும் ஒப்படைத்து விட்டவர்கள் ... இன்று கால திருப்பத்தின் காரணமாக வெறும் ஜடமாகிய நிலையில் மீண்டும் மறு ஜென்மத்தில் கூடுவது போன்ற உணர்வுகள்.. முகிலன் தனது காலை மீண்டும் வருடினான்.. முகாமில் பூட்டிய கால்.. அளவெடுத்தபடி தொடைப் பகுதி கால் குழாய்க்குச் சரியாக இருந்தது.. இப்போது உடல் தளர்ந்து விட்டது.. "காலுக்குக் குழாய் லூசா கிடக்கு..!" வருத்தத்திலும் வெளி வந்த புன்னகை அவனை அழகு படுத்தியது. அவள், அவனுள் லயித்திருந்தாள்..

❑ ❑ ❑

அன்றைய பகல் உணவாக அவள் காலையில் சமைத்திருந்த சோறும், கத்தரிக் குழம்பும் பசியாற்றியது. தகரச் சூட்டுக்குச் சவாலாக எதிர்த்து நிற்கும் வேம்பு, சுகமான காற்றை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தது.. முகிலனும், வதனியும் மூச்சு விடாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். எல்லாமே முடிவடைந்து போய் விட்ட வெறுமையான காலச் சூழல்.. உயிரையும், மனத்தையும், நினைவையும் மட்டுமே வைத்திருக்கும் அவர்கள், பின்னோக்கி அசை போட்டார்கள். தங்களை சுய விமர்சனத்துக்குள்ளாக்கிப் பார்த்தார்கள்.

.. யுத்தம் முறியடிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட விபரீதங்கள்.. பழி வாங்கல்கள்.. சித்திரவதைகள்.. இவற்றுக்குள்ளே தண்டனைகள்.. என உயிருடன் வதைக்கப்படும் உடல், மன வலிகள்.. இவற்றை அனுபவித்து விடு பட்டவர்கள் மீண்டும் சமூகத்துக்குள் வீசப்பட்டவர்கள் போல் வந்து விழுந்தவர்களே இந்தப் போராளிகள்.. சமுதாய வாழ்வில் உறவுகள், நட்புகள் எல்லாவற்றையும் இழந்தவர்கள்.. இந்த உறுப்புகளை இழந்த உடலோடும், பேதலித்திருக்கும் மனதோடும் சமூகத்தில் தனித்து விடப்பட்டவர்களாக.. விசித்திரப் பிரஜைகளாக நடமாடிக் கொண்டிருக்கும் அவர்கள் இன்னொரு புதிய சமூக சாதியினராகக் கணிக்கப்பட்டிருக்கும் சமூகக் கொடுவினைகளை அவர்கள் இருவரும் அந்த தகரக் கொட்டிலுக்கருகில், மரக் குற்றியில் அமர்ந்த வண்ணம் விசாலித்த பார்வைக்குள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். சலசலப்பில் மிதந்து வரும் வேப்பங் காற்று மட்டுமே அவர்களை ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தது..

முகிலன் மனதில் குமுழியிடும் நினைவுகளை எல்லாம் வார்த்தைகளாக வெளியில்

கொட்டிக் கொண்டிருந்தான்.

இயக்கம் தனியுலகம்.. போர்க்களம் தனியுலகம்.. இருண்ட காடுகள் தனியுலகம்.. சிறை தனியுலகம்.. புனர் வாழ்வு முகாம் தனியுலகம்.. இன்று இங்கு சமூகத்துக்குள் வந்த பின் தனிமைப்படுத்தப்பட்ட தகரக் கொட்டில் தனியுலகம்.. இத்தனை நினைவுகளும், உரையாடலும் முடிந்த பின்னர், வதனி பெருமூச்சு விட்டவளாய் இந்த சமூகத்துக்காகப் பரிந்து பேசவும் முன் வந்தாள். பாவம்.. சனங்கள்.. பாவம் சமூகம்.. முப்பது வருசங்களாகச் சின்னா பின்னமாகி, சிதைக்கப்பட்டு, தூசி துரும்புகளாகிக் கிடக்கும் இந்த மக்களிடமிருந்து நல் வரவை எதிர் பார்ப்பது எவ்வளவு மூடத்தனம் என்பதை நினைத்து அவனிடம் நியாயப்படுத்தினாள். " போர்க் காலத்தில் எங்கள் ராணுவத்தில் சேர்ந்தவர்களெல்லாம் ஏழை எளியவர்கள்தான்.. அன்றாடங் காய்ச்சிகள்தான். பணம் படைச்சதுகள் மேட்டுக் குடிகள் என்பவர்கள் எங்களைப் போல உயிரைக் குடுக்க முன் வரவில்லை.. பணத்தைக் எடுத்துவிட்டுப் பதுங்கிக் கொண்டார்கள்.. ஊரை விட்டே ஓடி மறைந்தார்கள்.. போர்ச் செலவுக்குப் பணமும் தேவைதான். இல்லாதவைதான் சிக்கிக் கொண்டனர்.. எங்கேயும், எதிலும் வர்க்க வேறுபாடுகள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.."

முகிலன் இயக்கத்தில் இணைந்து போராடியவர்களில் அடித்தள குடும்பத்துப் பிள்ளைகளே அநேகர் என்பதை உணர்ந்து பேசினான். அவனது உரையில் வர்க்க உணர்வின் பொருள் பதிந்திருந்தது. ஒரு செய்தி நிருபர் ஓர் மந்திரியைப் பேட்டி கண்ட நிகழ்ச்சியைத் தொலைக் காட்சியில் பார்த்த ஞாபகம் அவனுக்கு வந்தது.. " போராளிகளின் படையில் ஏன் தள தள முகங்கள், கொழு கொழு உடல்கள் கொண்ட ஆணையோ.. பெண்ணையோ காண முடியவில்லை..? அழகு, வசீகரம், தேகக் கட்டு, செழிப்பு நிறைந்த ஒரு போராளியைக் கூட பார்க்க முடியவில்லையே..?"

உலக அரங்கில்... போராட்டங்களில், போரில்... அரச ராணுவத்தில்.... அடித்தள வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே அனேமாகவிருக்கின்றனர். அவர்கள் கையில் ஆயுதங்களும், அதிகாரங்களும் வரும் போது, தங்களை ஒடுக்கிய எல்லோருமே எதிரிகளாகத் தெரிகின்றனர்.. என்பதை முகிலன் பதனியிடம் வலியுறுத்திப் பேசினான்..

பல சந்தர்ப்பங்களில் துப்பாக்கிகளைத் தூக்கிய இளைஞர்கள் எவ்வளவு கொடூரமாகினார்கள்..? சமூகப் பேதங்களைக் காட்டி ஏறி மிதித்தவர்களை, துப்பாக்கி கிடைத்த துணிவினால் எத்தனையோ பேர்களைச் சுட்டுப் பழி தீர்த்துக் கொண்டதில் திருப்தியடைந்தார்கள். இந்த செயலெல்லாம் தலைமையை மீறிய, இயக்கக் கட்டுப்பாட்டை மீறிய குற்றங்களாகவும் உணர வேண்டும் என்பதையும் அவன் அங்குச் சுட்டிக் காட்டினான்.

இரண்டு மண் கலயத்தில் தண்ணீர் சுமந்து வந்த பெரியவர் மிகப் பவ்யமாக இறக்கி வைத்தார். அவரை பதனி முகிலனுக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள் . "இவர் இந்தக் காணியில எனக்குக் கிடைத்த சித்தப்பா..! இந்தக் காட்டுக்குள்ள வந்த காலத்திலிருந்து எனக்கு அப்பாவாக இருந்து உதவி செய்கிறார். "ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த ஏன்ட மகன இயக்க காரர்கள் கடத்திக் கொண்டு போட்டார்கள்.." என்டு ஒரு நாளைக்கு என்னிடம் ஆயிரம் தடவை சொல்லிக் கொண்டிருப்பார்.." என்றாள்.

அந்தப் பெரியவரும் பதிலுக்குப் பேசினார்.."ஓம் தம்பி..! பெடியள்கள் துவக்குகளைத் தோளில் மாட்டிக் கொண்டதைப் பெரிசா நினைத்து கொண்டார்கள்.. மட்டுமரியாதை என்டு இல்லாம , வயசில் மூப்பு என்டு இல்லாம, மானக் கேடா பேசினவர்கள்..! நீங்களும்

அவன்கள் மாதிரி செய்தவைதானே..? அதுதானே உப்பிடு ஊர் உங்கள பேசுகிறார்கள்.. உங்கள இயக்கக்காரன் கள் கடத்தியிருப்பினம்.. பிறகு நீங்களும் என்ட மகனைப் போல எத்தின பிள்ளகள கடத்தியிருப்பீர்கள்..? ஒரு பக்கம் ராணுவம் கடத்தியது.. மறுபக்கம் இயக்கக்காரன் கள் கடத்தினவர்கள்..!" அவர் உணர்ச்சிவசப்பட்டவராய் குரலை உயர்த்திப் பேசிக் கொண்டிருந்தார். முகிலனும், பதனியும் அவரிடம் மறுத்துப் பேசாமல், தலை குனிந்தவர்களாகப் பொறுமை காத்தனர்.

அவர் பெருமூச்சு விட்டவராய் எழும்பி "இறுங்கோ வாறன்.." என்று வீட்டுக்குப் போனவர், திரும்பி ,ஒரு பெரிய பப்பாளிப் பழத்தைக் கொண்டு வந்தார். "வெட்டி சாப்பிடுங்கோ..! பழம் நல்ல ருசி.. வெய்யிலுக்குப் பசியாறும்..!" என்றவர் பதனியிடம் நீட்டினார். .

மகனைப் பறி கொடுத்த ஒரு தந்தையின் தவிப்பு... மனம் கொந்தளித்த உணர்வு.. அவரது வசை.. காலம் முழுவதும் அழுது செத்துக் கொண்டிருக்கும் மனம்.. இழந்த பிள்ளைகளை இன்று வரை தேடிக் கொண்டு திரியும் அவலம்.. என்ற தவிப்புக்களை முகிலனும், பதனியும் உணர்ந்து.. யுத்தத்தின் கோரத்துக்கப்பால், உறவுகளை இழந்த, உறவுகளின் மனக் குமுறல்கள் எவ்வளவு வேதனையாக இருக்கிறதென்பதை நேருக்கு நேர் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்..

அவர்களின் மௌனத்தைக் கலைத்த பெரியவர், ஒரு துயரச் செய்தியையும் சொன்னார். "வச்சக்காக நின்டு கொண்டிருந்த ஒரு போராளி பொடியன் மயங்கி விழுந்து, அவ்விடத்திலேயே சீவன் போய்விட்டதாம்.. வயசு முப்பத்து ஆறாம்..!" பெரியவர் குடிசைக்குத் திரும்பினார்..

தகவலைக் கேட்ட அவர்களிருவரும் மௌனாஞ்சலி செய்து கொண்டிருந்தார்கள். "இந்தச் சாவுகள் எல்லாமே வீரச் சாவுகள்தான்..!" முகிலனின் மனம் முனி முணுத்தது.. காலையில் வாசித்த பத்திரிக்கை செய்தியும் மனதை முள்ளாக நெருடியது.. " விசாரணைக்குப் போய் வரும் கைதிகளை நிர்வாணமாக்கி சோதனை செய்யும் சிறையதிகாரிகளைப் பற்றி ஜனாதிபதிக்கு ஒரு கைதி எழுதிய உருக்கமான கடிதம்.." இச் செய்தி அவன் மனதுக்குள் இரத்தக் கசிவை ஏற்படுத்தியது.. கழுத்தில் நஞ்சு கட்டிய கயிற்றை இழந்தவர்கள் வருசக் கணக்கில் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.. மனம் இன்னும் கொதித்தது.. "விடுவிக்கப்பட்ட போராளிகளின் திடீர் சாவுகள் பேசப்படுவதில்லை.. பட்டினி சாவுகள் பேசப்படுவதில்லை..வெறுமனே பத்திரிக்கைச் செய்திகளாகிக் கொண்டிருக்கின்றன.. விச ஊசி போட்டார்கள் என்ற சர்ச்சைகளும் செய்திகளாகின்றன.. தித்திப்பென்று சுருண்டு விழுந்து சாவும் பறவைகளைப் போல.. செத்து.. செத்து.. கரையொதுங்கும் மீன்களைப் போல.. போராளிகளின் சாவுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.. என்று அதிர்ச்சி தரும் செய்திகளைப் பத்திரிக்கைகள்; வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றன.. என்பதையெல்லாம் இவர்கள் இருவரும் அறிந்திருந்தார்கள். அவர்கள் ஓர் அரை நாள் பொழுதில் தங்களது போர் வாழ்க்கையில் முடிந்து போன துயரங்களையும், தொடர்ந்து வரும் துயரங்களையும் பகிர்ந்து உரையாடியதில் களைத்துப் போயிருந்தார்கள்.. முகிலன் தண்ணீர் கேட்பதற்கு முன்பே , வதனி பானையிலிருந்து குளிர்ந்த நீர் கொண்டு வந்து கொடுத்தாள்.. முகிலன் புறப்படுவதற்குக் காலை மாட்டினான்.. வதனி தயங்கியபடி "முகிலன்..! நீங்கள் இங்க தங்கி விருந்து போறதிலேயும் எந்த பிரச்சனையும் எனக்கில்லை.. சித்தப்பா குடிசையில் தங்கலாம்..!" என்றாள்.

"இரவு தங்கவே முடியாது வதனி.. ஒரு நாய்க் குட்டி வளக்கிறன்..! அது என்னத் தேடும்.. ஒரு நாளும் அது தனியா இருந்ததில்லஞ்பாதையை பாத்துக் கொண்டே அழும்..

நான் கட்டாயம் போயாகணும்.. திரும்ப ஒருக்கா என்டைக்காவது சந்திக்கலாம்..” என்று பலவந்தமாக எழும்பினான்.. அவள் சித்தப்பா கொடுத்த பப்பாளிப் பழத்தை அவனிடம் கொடுத்தாள். அவன் தயங்கினான்.. “எனக்குக் கிடைக்கும்.. நீங்கக் கொண்டு போங்கோ..!” என்று நெடுஞ் சாலை வரை அவனோடு சென்று திரும்பினாள்.

வதனியின் ...மனதுக்குள்.. ஒரு விருப்பம்.. இருந்தது.. நோய் பட்ட அவன் எந்த நேரமும் இறந்து போகலாம்.. “நானும் நிறைய நாள் இருக்கப் போவதில்ல வதனி..!” என்று அவன் சொன்னது அவள் நெஞ்சைச் சுட்டது.. இருக்கும் சில காலம் வரையிலாவது நண்பர்களாகப் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் துணையாக இருந்து கொண்டால் என்ன..? இதை அவள் அவனிடம் கேட்டிருக்கலாம்.. என்று அவள் வருந்தினாள். “நான் கேட்டிருந்தால், என் மேல் அவன் வைத்திருந்த அபிமானம் கெட்டுப் போயிருக்கும்..! அவனே புரிந்து, அவனே கேட்டிருக்கலாம் தானே..!” அவள் மனம் இன்னும் விவாதித்தது.. அப்படி அவன் கேட்டிருந்தால், பெண் சுகத்துக்காக முயல்கிறான்.. என்று நான் நினைத்து விடுவேனோ என்று அவன் தயங்கி இருக்கலாம் தானே..? இந்த என் விருப்பம் காதலுக்கும்.. காமத்துக்கும் அப்பாற்பட்டதுதானே..! அவளது வாதப் பிரதிவாதங்கள் மனதுக்குள் போர் புரிந்து கொண்டிருந்தாலும், மரணத்துக்கு எதிராக.. போராளியாக.. வாழ்ந்த ஓர் வீராங்கனையாக இருந்தாலும், அவளது பெண்மை என்ற ஒரு பண்பாடு அவளைத் தடுத்துக் கொண்டது. அவள் இயக்கப்படும் ஒரு கருவியாகவே தன்னை உருமாற்றிக் கொண்டு, இயங்கிய காலம் இன்று இயங்காமல் துருப் பிடித்துப் போய்...அவள்; ஒரு போதும் இப்படி கண் கலங்கியதில்லை.. அவள் ஒரு துப்பாக்கியாகவே ஜடப் பொருளாக வாழ்ந்தவளுக்குக் கண்ணீர் வடிந்திருக்கக் கூடாது..வதனி தன்னை சுதாகரித்துக் தகரக் கொட்டிலுக்குள் நுழைந்தாள்.. ▶




# ச. இராஜ்குமார் கவிதைகள்

கண்கலெங்கும் நிறைந்தவளே
நெஞ்சமெங்கும் உரைந்தவளே
காதலை கொடுத்திட்டவளே ......
எல்லாமே பொய்யாகிட
நீ நான் மட்டும் இங்க
மெய்யாக வாழ்வதேனடி.........!!!

❑

கூடிழந்த பின்பும்
மீண்டும் பறக்கின்றன
காற்றில்
பட்டாம்பூச்சியின் சிறகு...!!! ▶

● ந.கிருஷ்ணசிங்கம்



# வதைசூழ்ந்த வாழ்க்கை

கொழும்பு நகரை நவீனப்படுத்துதலின் செயற்பாடுகள் தொடரும் இவ்வேளை, சகலதுறைகளிலும் முன்னேற்ற முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஆயின் முகத்துவாரம் சந்தைமட்டும் அதன், கோலத்தில் இதுவரை எந்தவிதமான மாற்றத்தையும் கண்டதாகத் தெரியவில்லை.

தினமும் சனசந்தடியோடு பணம்புரளும் பன்முகப்பட்ட வியாபாரங்கள்நடக்கும் பெரியதொரு சந்தையதில் தினமும் அமளிக்குக் குறைவில்லை. பொருட்களின் விலைகளை உரத்துக்கூறி விற்பவர்களும், கொள்வனவு செய்பவர்களும், தரகர்களும், மதுவருந்திவிட்டு வருபவர்களும் ஆளுக்காள் தகராறுகள்படும் நிகழ்வுகளும், மீன்மணமும்கூட அற்றுப்போய் அந்தச்சந்தையானது கொரணா நோய்த்தடுப்பு ஊரடங்கால் வெறிச்சோடிக்கிடக்கின்றது. அங்கு, வியாபாரங்கள் செய்தவர்களின் வாழ்க்கையில் வறுமைவந்து சூழ்ந்துகொண்டதினால், வயிற்றுப் பாட்டுக்கே திண்டாடும் நிலைதோன்றியுள்ளது.

என்ன.. வாய்மூடிபோட்டுக்கொண்டு திரியிறாய், சுகமாயிருக்கிறாயோ..

என்று ஆறுமுகம் கேட்டதும் தருமன் விரக்தியாகச் சிரித்தான்.

உன்னைப்பாப்பமெண்டு வந்தனான்.

பிள்ளைகள் பட்டிணி.

கடைகண்ணியெல்லாம்பூட்டு. சந்தையடியைப்பாத்தியே.. செத்துப்போய்க்கிடக்குது. கண்டறியாத ஊரடங்குச்சட்டம் எங்களைபோலை ஏழைகளின்ரை வீடுகளிலை வயிறுகள்காயுது

ஆறுமுகமண்ணை, நான் உந்தப்பொலிஸ் மிரட்டலுக்குள்ளாலை தப்பிவந்தது உங்களிட்டை ஏதும்காசு கடன்கேப்பம் எண்டுதான்.

பெரிதாகச்சிரித்த ஆறுமுகம் எடையப்பா, என்னட்டை எங்காலைகாசு. நான்படுகிறபாடு உனக்குத்தெரியாது.

என்றவர் கூறவும், தனக்குள் ஏதோகதைத்து அவரை வைதவன் பெருமூச்சுவிட்டவாறு

வதையுண்டு கலங்கி மௌனமாய்நின்று யோசித்துவிட்டு..

மேல்வீட்டிலை வாடைக்கு இருக்கிற தவேந்திரன் வாத்தியார் நல்லபெடியன். என்னோடை கதைக்கிறவர். பள்ளிக்கூடமும் நடக்கிறதில்லை. அவர் மேல்வீட்டிலைதானிருப்பார். அவரிட்டைக் கொஞ்சக்காசு கடன்கேக்கலாமென்று யோசிக்கிறன்.

அந்தாளிட்டையோ, எடையப்பா உனகுத்தெரியாது அந்தாள் சரியான நப்பிகண்டியோ. பீற்றரின்ரை இந்தப் பழையவீட்டிலை இன்னும் மூன்றுபோரோடை தானுமொருத்தராய் உந்தவாத்தி ஏன்வந்து ஒட்டிக்கொண்டு இருக்குதுதெரியுமே.

காசுமிச்சம்பிடிக்கத்தான். கொஞ்சவாடகையோடை பீற்றற்றை பெண்சாதி அலிஸ்நோனா குடுக்கிற அரைச்சாப்பாட்டையும் வாங்கித்திண்படி அந்தாள் சிக்கனமாய்ச்சீவிக்குது. இல்லாட்டியொரு இளம்வாத்தியார் போயும்போயும் முகத்துவாரத்திலை இருக்கிற இந்த முடுக்குக்குள்ளைவந்து குடியிருப்பாரோ யோசிச்சுப்பார். நீயொருவிசரன். அந்தாளைப்பற்றிக்கதைச்சு நேரத்ததை மினக்கெடுத்தாத உனக்குத்தெரியாத ஆட்;களாயில்லை. எங்கையும்போய் எங்கடையூர் ஆக்களைச்சந்தித்து காசுமாறிறஅலுவலைப்பார்.

ஓமதுசரியண்ணை. இந்தக் கொரனாவாலையல்லோ அங்கையிங்கைபோய் அலையமுடியாமற்;கிடக்குது..

அவன், சொல்லிமுடிக்குமுன் ஆறுமுகத்தின் தாய்க்கிழவி கதைக்கத்தொடங்கினார்,

இந்தநோய் இருக்கிறதே ஏதோ கொரணவோ என்னகோதாரியே, இதுவந்தால் மருந்தேயில்லையாம். மண்டையைப் போடவேண்டியதுதான்.

முன்னம் எங்கடை மலையகத் தோட்டங்களிலை வந்துதொற்றிய கோதாரி கொலறாநோய்போலை இதுவுமென்றுசொல்லீனம். உடம்பிலை பலமுள்ளவையளை இது கொல்லிறது குறைவாம். ஏடபெடியா கூப்பனரிசிச்சோறுகாச்சித் தின்னிற எங்களுக்கு பாலமெங்கவாறது. உப்பவுந்தச் சந்தையும் கூடிறதில்லை பொலிஸ்காவல் போட்டிருக்குது.

அதையிதைவித்து நாலுகாசு தேடி வயிறாரத் தின்னிறதுக்கு. கையிலைமடியியிலை ஒண்டுமில்லாமலிருக்கிறம். எங்களிட்டைவந்து

நீகடன்கேக்கிறா..

கிழவியின் புறுபுறுப்பைக் கேட்டுச்சினங்கொண்ட தருமன் வாய்க்கவசத்தைச் சரிசெய்து

கொண்டு, வீதியிலிறங்கிநடந்தான்.

அவர்கள்குறிப்பிட்ட இந்த தவேந்திரன் வாத்தியார் மட்டக்களப்பைச்சேர்ந்தவர் ஆரயம்பதியென்னும் கிராமம்தான் அவற்றையூர்.

அவரின் மூத்தங்கைச்சியார் கலியாணம்செய்திட்டார். இன்னும் இரண்டு தங்கச்சிமாருக்கும் கலியாணம் முடித்துக் கொடுத்தபின்தான் வாத்தியார் திருமணபந்தத்தில் இறங்குவது என்ற இலட்சியத்தோடு இருக்கின்றார்.

முகத்துவாரம் வீட்டில் தவேந்திரனோடு தங்கிவாழும் மற்றமூவரும் அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்கள். கொழும்புதான் அவர்களின் பிறந்தகமாக இருந்தபோதும், தங்களின் பிள்ளைகளோடு சேர்ந்துவாழவிரும்பாது இந்த வாடகைவீட்டில்வந்து வசிக்கின்றார்கள். அவர்களுள் ஆசிர்வாதம் என்பவரோடு நெருங்கிய நட்போடுபழகும் தவேந்திரன் தனது, வாழ்வியல் பிரச்சினைகளை அவரோடு பகிர்ந்துகொள்பவன்.

தம்பி தவேந்திரா நான் செல்லிறதைக்கேள். உனக்கு காதலியிருக்கிறாவென்று சொன்னனியல்லோ.. கலியாணத்தை இன்னும் ஒத்திவைச்சுக்கொண்டு இருக்காதை. உன்ரைபின்தலையிலை வழுக்கை பிறைபோலைத் தெரியுது. உனக்கு வயதுபோகுது. உன்ரை தங்கைமாரின்ரை கலியாணத்துக்குப் பணம்தேடிறது நல்லதுதான். அதையெப்பவும் செய்யலாம். முதலுன்னுடைய கலியாணத்தைமுடி.

றெயிலோடத் தொடங்விட்டுது. லீவையெழுதிக் கொடுத்திட்டு ஊருக்குப்போற அலுவலைப்பார்..

முதியவரான அவரது அறிவுரையில் நியாயம்தெரிவதையுணர்ந்த தவேந்திரன் தனது பிரயாணத்தைத் தொடங்கினான்.

நேரகாலத்துக்கு றெயில்கள் ஓடாததால் காத்திருப்பும் கடுமையான அலைச்சலும்பட்டவாறு வெகுகளைப்போடு பிரயாணித்தவன் ஊரில்வந்து இறங்கினான்.


வீடுவந்து சேர்ந்தவனை வரவேற்று ஆறியமரவிடாது அதிரவைத்தாள் அவனின் மூத்ததங்கை மகாலட்சுமி.

தான் கணவனிடமிருந்து பிரிந்துவந்திட்டேனென்று அழுதுஅரற்றினாள். ஆற்றாமையுற்றவளாய் அவலக்குரலில் கத்திக்குழறினாள்.

அண்ணை, நீதானே விடாப்பிடியாகநின்று அந்தாளை எனக்குக் கலியாணம் செய்துவைச்சனி. என்னக்கு அந்தாளோடை சேர்ந்துவாழமுடியாது. காரணம்கனக்க இருக்குது. எனக்குநீதான் டைவோஸ் எடுத்துத்தரவேணும். இல்லையோ நான் கட்டாயம் தற்கொலைசெய்வன். என்றுகூறிச் சத்தியம்செய்தாள்.

தாயாரோ அவளைத்திட்டிப்பேசியவாறு தனது தலையில் அடித்துக்கொண்டார். தந்தையாரோ இரும்மியவாறு திண்ணையில் குறண்;டிப் படுத்திதுக்கொண்டார். மற்றைய தங்கச்சிமாரான நித்தியலெட்சுமியும், சற்குணலெட்சுமியும் தமையனை ஏறெடுத்துநோக்கியபடி விம்மியழுதார்கள்;.

நோய்தொற்றுக்குப் பயந்தவாறு சித்திரவதைகள்பட்டுக் களைத்து, வீடுவந்துசேர்ந்தவன். களைப்புமிகுதியால் திண்ணையில்குந்தினான். தங்கை மகாலெட்சுமி தொடங்கியபிரளயம் தணிந்து முடிவதாயில்லை. ▶



# கோவை சசிகுமார் கவிதை


*சப்தமில்லாத*
*மௌன விசும்பலில்*
*விக்கித்து தேம்பியழும்*
*அழுகையில்!*

*சுமக்கின்ற சுமையில்*
*சிறகின்றித் தவிக்கும்*
*வண்ணத்துப் பூச்சியாய்*
*உறங்கும் மழலையின்*
*பசி!*

*இரக்கமற்ற இதயமில்லாக்*
*கூட்டத்தின் நடுவே*
*மூச்சிறைக்க ஓடியும்*
*எட்டப்படாத*
*உணவுப்போராட்டத்தின்*
*நடுவே*
*மிச்சமானது*
*இடர்பாடுகளின் முனகல்!*

*பயண முடிவில்*
*சடங்குகள் முடிந்து*
*சமர்ப்பணம் செய்யப்பட்டதில்*
*அடங்கிப்போகும்*
*அனைத்தும்!*

*குளிரூட்டப்பட்ட*
*அறைக்குள் உறங்குபவர்க்கு*
*தெரியாவா போகிறது*
*எங்களின் மழலையின்*
*பட்டினியில்*
*உங்களின்*
*உணவுப் பொட்டலங்களின்*
*சுவை!*



# கார்த்திகா கவிதை

**நானும் ஒருவன்**

*நீங்கள் சொல்வதைப்போல*
*நானொன்றும் அவ்வளவு கெட்டவனல்ல...*

*என் அவசரத்திற்கு*
*கழிவறை செல்லும் வரை*
*காத்திருக்க இயலாதென*
*சாலையோரம் ஒதுங்கினேன்...*

*வேகமாய்க்கிளம்பும் என்னிடம்*
*பசியோடு*
*கைநீட்டும்*
*கிழவியை*
*வார்த்தைகளால் வசைபாடினேன்...*

*இடைமறித்த*
*காவலரிடம் மறந்துவிட்ட*
*ஓட்டுநர் உரிமத்தை*
*நினைத்து என்னை நொந்தபடியே*
*இருநூறை*
*நீட்டினேன்...*

*உபரியாய் அலுவலகத்தில்*
*கிடக்கும் கரிக்கோல்களைக் காசின்றி*
*காசின்றி எடுத்துச் செல்லும்*
*மேலாளரை கர்ணன்*
*எனப் புகழ்கிறேன்...*


*சிரித்தபடியே*
*தேநீர்தரும்*
*கடைநிலை*
*ஊழியரிடம்*
*சிரிக்க மறுக்கும்*
*நான் ...*

*நீங்கள் நினைப்பதுபோல்*
*அவ்வளவு கெட்டவனல்ல...*

*பொய்கள் புரளும்*
*தேசத்தில் மெய்யாய்*
*வாழமுயன்று தோற்றுப்போய்*
*புரையோடிய பொய்களை முதுகில்*
*சுமந்தபடியே*
*வாழப்பழகிய எத்தனையோ கோடிகளில்*
*நானும்*
*ஒரு எண்*
*அவ்வளவே...*

● ஐ. கிருத்திகா

# உச்சகட்டம்



ஜன்னல் வழியே வீசிய காற்று அடுப்புத் தீயை அலைகழித்தது. ஒருநேரம் தீ கிழிந்த சேலை முந்தானைபோல உருவம் காட்டியது. மறுநொடி பாம்பு போல படமெடுத்து ஆடியது.

விமலா தீயைக்குறைத்து தோசையைப் திருப்பிப்போட்டாள். கோதுமை தோசை.... நாலு மிளகு தட்டிப் போட்டு, சீரகத்தைத் தூவி ஒரு பெரிய வெங்காயம், பச்சைமிளகாய் நறுக்கி மாவின் தலையில் கொட்டியிருந்தாள்.

மதியசோறு மீறாத நேரங்களில் ரவா உப்புமாவையோ, கோதுமை தோசையையோ வைத்து சமாளிக்க வேண்டிய நிலைமை. வெறும் வயிறாய் படுப்பதில்லை. பசிக்கும் வயிற்றுக்கு எதையோ ஒன்றைப்போட்டு எரிகின்ற கொள்ளியில் தண்ணீரை ஊற்றி அணைப்பதுபோல் பசியையும் அணைத்தாகிவிடும்.

பிறகென்ன படுக்கைதான், கொட்ட, கொட்ட விழிப்புதான். விமலாவுக்கு சாமான்யத்தில் தூக்கம் வராது. குறுக்கே ஓடும் உத்திரத்தை வெறித்தபடி கிடப்பாள். இருட்டிலும் குளவிக் கூடு கட்டிய உத்திரம் பளிச்சென்று தெரியும்.

“ விமலா , பசிக்குது சாப்புடலாமா.....?”

மாரிமுத்து தயக்கமாய் கேட்டான். உரிமையோடு பேசி பல காலமாகிறது.

எதொன்றுக்கும் ஒரு தடவைக்கு நாலுதடவை யோசித்தே பேச வேண்டியுள்ளது. விமலா தட்டில் தோசையைப்போட்டு ஓரத்தில் மதியக்குழம்பை ஊற்றி எடுத்து வந்து அவனிடம் நீட்டினாள்.

நாலு தோசை சாப்பிடும்போதே இன்னொன்று கேட்கலாமா, வேண்டாமா என்கிற எண்ணம் உள்ளே ஓடிற்று. ஆவலாய் தின்னப்பறக்கிற வயிற்றுக்கு இருப்பு நிலை குறித்து புரியாதோ என்று அவனுக்குத் தோன்றும்.

எத்தனை போட்டாலும் அடங்காத வயிறு பானையளவு பெருத்துவிட்டதோ என்ற சந்தேகம் அவன் சும்மா கிடக்கும் நேரங்களில் மனதைக்குடையும். இடுப்புக்கு கீழே உணர்வுகளை நீத்துவிட்டது உடல்.

உடலில் பாதி உணர்விலும், மீதி உணர்வற்ற நிலையிலும் மனிதனாகவும், மரமாகவும் மாரிமுத்து இரட்டைவேடம் கட்டிக்கிடந்தான். வயிற்றிலும் உணர்வை நீக்கியிருக்கக்கூடாதா இந்த கடவுள் என்றுதான் அவன் இப்போதெல்லாம் எண்ணுகிறான்.

விமலா அடுப்படியை சுத்தம் செய்து பாத்திரங்களை ஒதுக்கி வைத்தாள். தின்ற கோதுமை தோசை திம்மென்று நெஞ்சிலேறிக்கிடந்தது. இத்தனைக்கும் இரண்டு தோசைதான் சாப்பிட்டாள். பூரி, சப்பாத்தி என்று வித, விதமாக சாப்பிட ஆசை. வெறும் தோசைக்கும், சோற்றுக்கும்தான் விதி வாய்த்திருந்தது.

மணிக்குட்டி சுரவேகத்தில் பிதற்றினான். இரண்டுநாளாக அவனுக்கு சரியான காய்ச்சல். மாத்திரை போட்ட வேகத்தில் வேர்த்து வடியும் உடல் நேரமாக, ஆக தணலாய் தகிக்கத் தொடங்கிற்று.

" காய்ச்சல் மூணுநாள் இருக்கும். தொடர்ந்து மாத்திரை குடுங்க" என்று அரசாங்க ஆஸ்பத்திரி டாக்டர் எழுதித்தந்த மாத்திரைகளை முழுங்க வைப்பதற்குள் விமலாவுக்கு போதும், போதுமென்றாகிவிட்டது.

" முழுங்கித் தொலையேன்டா. ஏன் உசிரெடுக்குற....." என்று விமலா திட்டினாள். எல்லா கருமத்திற்கும் அவளே மெனக்கெட வேண்டியுள்ளதே என்கிற ஆற்றாமைதான். அவள் மகன் மீது கோபப்படும்போதெல்லாம் மாரிமுத்துவுக்கு தவிப்பாக இருந்தது. .

" மாத்தரையக் கொண்டா, புள்ளைக்கி நான் குடுத்து பாக்குறேன்" என்று சொல்லத் தோன்றியது. மாத்திரை, தண்ணீரை கையில் கொடுத்து மகனை அழைத்துவந்து அருகில் நிறுத்தி சகல வேலைகளும் விமலா செய்யவேண்டும்.

பின்பு மாத்திரையை வாயில் போடுவதென்ன பெரிய வேலையா....இந்த எண்ணம் தோன்றியதும் மாரிமுத்து கதவடைத்ததுபோல் வாயடைத்துக் கிடந்தான்.

செம்பா ஓரம் கிழிந்த பாயை விசிறிப்போட்டாள். அது காற்றைக் கிழித்து தரையில் துவண்டு விழுந்தது.

பாயை வீசிய வேகத்தில் அவளின் மனநிலை புரிந்தது. அதற்கு மருந்து தடவுவதுபோல் ஒரு வார்த்தை சொன்னாலும் மௌனம் உடையும். உடையும் மௌனத்தின் பின்னால் போர்க்குரல் எழும்பலாம். அது துவந்த யுத்தமாகவும் நீளலாம்.

முடிவற்ற நீட்சியில், திரும்பவும் யதாஸ்தானத்தில் இருப்பு கொள்ள முயன்றால் அது தோல்வியிலேயே முடியும்.

அதனால் மாரிமுத்து வாய்மூடிப் படுத்திருந்தான். இருவருக்குமிடையேயான மௌனம் ஒரு கனத்த போர்வையை போர்த்திக்கொண்டு காத்திரமாகக் கிடந்தது.

விமலா விளக்கணைத்துப் பாயில் விழுந்தாள். கண்கள் உத்திரத்தை வெறித்தன.

மணிக்குட்டி வியர்த்து வடியக்கிடந்தான். மாரிமுத்து தூக்கத்தைக் கொண்டு வர பகீரத பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான்.

தூங்குவதைவிட தூங்குவதுபோல் நடிப்பதற்கு அதிகம் மெனக்கெட வேண்டியிருந்தது. அந்த மெனக்கெடல் அடிக்கடி முனகும் விமலாவின் குரலில் தீவிரமாகும்.

" யப்பா............யம்மா....." என்று அவள் திடீரென குரல் கொடுத்து புரண்டு, புரண்டு படுப்பாள். அவளின் அசைவில் பாய் ஒருவித நறநற ஒலியை எழுப்பும். மாரிமுத்து அசைவற்று கிடப்பான். தாவி அணைத்துக்கொள்ள கைகள் துடித்தாலும் கால் எந்த இடத்தில் இருக்கிறதென்று தெரிந்தாலல்லவோ எழ முடியும்.

விமலா முந்தானையால் விசிறிக்கொண்டாள். மேலே சுழலும் மின்விசிறி கடக்கடக் சத்தத்தை தந்ததேயொழிய காற்றை தரவில்லை. ஒரே வெக்கையாயிருந்தது. மனவெக்கை, உடல்வெக்கை இரண்டும்தான்.

ஒரு சொம்பு நீரூற்றினாலும் உடல் குளிர்ந்துவிடும். ஆனால் அதுதான் உடல் வெக்கையா..... உணர்வுகளின் கொதிப்பில் மனசுக்குள் ஏறிக்கிடக்கும் சூடு உடலை தகிக்கவைக்கும்போது மேலுடம்பு குளிர்ந்தென்ன பிரயோஜனம்.

மூன்று வருடங்களாக உடம்பு கொதித்து கொண்டிருக்கிறது. காமச்சூடு தரித்து, சாலையின் மேல் கொட்டப்பட்டிருக்கும் வெயில்பட்ட தாரின் சூடு. காதலும், ஊடலுமாய், விரசமும், சரசமுமாய் கூடிக்கிடந்துவிட்டு மூன்று வருடங்களாக சந்நியாச வாழ்க்கை வாழ்வதென்பது கொடுமைதானே.

" மணிக்குட்டி, தூங்கித் தொலையேன்டா..." என்று மாரிமுத்து கெஞ்சும்போது விமலா தலையிலடித்து கொள்வாள். மூன்று வயது மணிக்குட்டி,

" ஏம்ப்பா தூங்க சொல்லுத...?" என்று மழலையாக கேட்பான்.

" சொன்னா ஒனக்கு புரியாதுடா. நீ தூங்குனாத்தான் நாங்க சந்தோசமா இருக்கமுடியும்."

மாரிமுத்து ஒருமுறை சொன்னபோது விமலா அவனை முறைத்தாள்.

" புள்ளைகிட்ட எதப்பேசுறதுன்னு ஒரு வெவஸ்தையில்லியா....வர, வர ஒங்களுக்கு வாய்க்கொழுப்பு ஜாஸ்தியாயிருச்சு" என்றவளுக்கு உள்ளூர சந்தோஷம்தான்.

சிமிழ் மாதிரி வீடு. அதில் சிட்டுக்குருவிகளாய் மூன்று ஜீவன்கள். மூவருக்குள்ளும் இழைந்தோடிய அன்னியோன்யம் அவ்வபோது அவர்களையே வியக்கவைக்கும். நல்லதாக உடுத்திக்கொண்டதில்லை. வகையாக சாப்பிட்டதில்லை.

மாரிமுத்து வருமானம் அதற்கெல்லாம் இடம் கொடுத்ததில்லை. ஆனாலும் அகல் விளக்கின் சீரான சுடர் தரும் வெளிச்சம் போல் அங்கே மகிழ்ச்சி நிரம்பிக்கிடந்தது. சில

நேரங்களில், அதிலும் குறிப்பாக இரவு வேளைகளில் கணவன், மனைவியின் நெருக்கமான தருணங்களில் அது பொன்போல் தகதகத்தது.

“ நாலு சொவத்துக்குள்ள நடக்குறது வெளில தெரியாம அதுவோ பாட்டுக்கு குந்துனாப்ல குடும்பம் நடத்துதுவோ. வேளைக்கு ஆக்கி திங்குதுங்களா, பட்டினியா கெடக்குதுங்களான்னு எதுவும் தெரியாது. எப்பவும் சிரிச்ச மொகமா வளைய வருதுவோ...” என்று பக்கத்துவீட்டு முத்துப்பேச்சி தன் புருஷனிடம் சொல்லிக்கொண்டிருந்ததை கேட்டபோது விமலாவுக்கு உள்ளுக்குள் சிலிர்த்தது.

மாரிமுத்து கட்டிட வேலைப் பார்த்தவன். இருந்தும் கெட்ட சகவாசம் எதுவுமில்லை. தானுண்டு, தன் வேலையுண்டு என்றிருந்தவன். சித்தாள் வேலைதான். சம்பளம் கூடக்குறைய வரும். அதை வைத்து விமலா வயிறு வாடாது வகை செய்தாள்.

“ வாங்குற சம்பளம் மொத்தத்தையும் செலவழிச்சிட்டா நாளைக்கி புள்ளைக்கின்னு எதுவும் சேத்து வைக்கமுடியாது. அதனால எண்ணி எண்ணித்தான் செலவு செய்யணும்“ என்பாள்.

“ நீ சொன்னா சரிதான்” என்று மாரிமுத்து தலையாட்டுவான். எல்லாம் சீராகத்தான் போய்க்கொண்டிருந்தது.

அந்தநாள் மட்டும் அது நேராதிருந்திருந்தால் வெல்லப்பாகு தித்திப்பாய் வாழ்க்கை தித்தித்து கொண்டிருந்திருக்கும். வழக்கம்போல் எலுமிச்சை சோறு கட்டிக்கொண்டு வேலைக்குப்போன மாரிமுத்து இரண்டாவது மாடியிலிருந்து கால்தவறி கீழே விழுந்தான். முதுகெலும்பில் பலத்த அடி.

“ இனிமே உன்னால நடமாடமுடியாது. படுக்கையிலதான் எல்லாம். மனசை தேத்திக்க...” என்று மருத்துவர் சொன்னபோது மாரிமுத்து துடித்துப்போய்விட்டான்.

விமலா மயக்கம் போட்டு விழுந்தாள். மாரிமுத்து வேலைமுடிந்து வந்ததும் இரண்டாம் ஆட்டம் சினிமா போகவேண்டுமென்று நினைத்து வைத்திருந்தாள். அதற்காக படி மல்லிகைப்பூ வாங்கி தொடுத்து வைத்திருந்தாள். எல்லாமே பாழ்.

மாரிமுத்து படுக்கையில் விழுந்து மூன்றாண்டுகள் ஓடிவிட்டன. ஆரம்பத்தில் அருகிலமர்ந்து ஆறுதல் சொன்ன விமலா கொஞ்சம், கொஞ்சமாக விலகிப்போனாள்.

அவள் சம்பாதித்தால்தான் குடும்பவண்டி ஓடும் என்கின்ற நிலைமை. நல்லவேளையாக நூறுநாள் வேலை கைகொடுத்தது. வருடத்தில் பாதி நூறு நாட்கள் வேலைக்கும், மிச்சம் சில்லறை வேலைகளுக்கும் போய் நாட்கள் ஓடின.

வேலை செய்து, செய்து கைகளில் காய்ப்பேறிக்கிடந்தன, மனதிலும்தான். மாரிமுத்துவின் காதலில் பஞ்சுபோல் மிருதுவாய் இருந்த மனசு வரவர முரடு தட்ட ஆரம்பித்தது. அதோடு உடல் உபாதைவேறு. அதை யாரிடம் சொல்லமுடியும். சொன்னால் காறித்துப்ப மாட்டார்களா......

விமலா வேலைக்குக் கிளம்பிவிட்டாள். சாப்பாடு, தண்ணீர் இத்தியாதிகளை மாரிமுத்துவுக்கருகில் கொண்டுவந்து வைத்துவிட்டு மணிக்குட்டியை கையில் பற்றி கதவை அறைந்து சாத்திவிட்டுப் போனவளை மாரிமுத்து வெறித்துப் பார்த்தபடி கிடந்தான்.

போய்வாரேன் என்று சொல்லக்கூட பிரியப்படாது அவள் அலட்சியமாக வெளியேறினாள். அவனுக்கு சாப்பாடு கொடுத்து, குளிக்கவைத்து, மலம் அள்ளி மாய்ந்து போகிறவளிடத்தில் தனக்கிருக்கும் எதிர்பார்ப்பு நியாயமற்றது என்று அவனுக்கு புரிந்துதான் தொலைக்கிறது.

இருந்தும் கேடுகெட்ட மனசு அதற்காக அலைகிறதே என்ன செய்ய. விமலா அவனை சிரமப்பட்டு நகர்த்தி கழிவுகளை சுத்தம் செய்யும்போது அவனுக்கு உடம்பே கூசிப்போகும். உடற்கூட்டுக்குள் ஒளிந்து கிடக்கும் உசிர் வதைபடுவதுபோல அவஸ்தை உழன்றெடுக்கும்.

பகல் முழுக்க தனிமை. வீடடைந்து கிடக்கும் அவனுக்கு அந்தத் தனிமையை சிநேகிதம் பண்ணிக்கொள்ள திறமையிருக்கவில்லை. வாழ்க்கை சலித்து போயிற்று. மணிக்குட்டி கூட இப்போதெல்லாம் அவனைக் கண்டும், காணாததும்போல போகிறான். இழுத்துவைத்து கொஞ்ச அவனுக்கு ஆசைதான். பயல் பிடி கொடுத்தால்தானே.

“ மணிக்குட்டி, இங்கவாடா........” என்று கூப்பிட்டால்,

“ நான் வெளையாடப்போறேன்” என்று அவன் தலைதெறிக்க ஓடுவான்.

அது தன் மீதான பச்சாதாபத்தை மாரிமுத்துவுக்கு மேலும் அதிகப்படுத்தியது. கையில் மிட்டாய் வைத்துக்கொண்டு கூப்பிட்டால் குழந்தை ஓடிவரும். வெறும் கையோடு கூப்பிட்டால் நாய்கூட திரும்பிப்பார்க்காதே..........

மாரிமுத்து ஆயாசத்துடன் பெருமூச்சு விட்டான். வெயிலேறி விட்டதற்கு அறிகுறியாக வீடு முழுக்க உஷ்ணமேறிக்கிடந்தது. கைக்கு எட்டும் தூரத்திலுள்ள சுவிட்சை அழுத்தி மின்விசிறியை ஓடவிட்டு உஷ்ணத்தை குறைத்துக்கொள்ள அவனுக்கு விருப்பமில்லை.

விமலா மணிக்குட்டியை பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு நேரே வேலை நடக்குமிடத்துக்கு வந்தாள். அன்று ஆற்றுக்கரையை சுத்தப்படுத்தும் பணி. ஆற்றின் இருமருங்கிலும் ஏகத்துக்கு செடிகள் மண்டிக்கிடந்தன.

அதில் நிறைய பாலிதீன் பைகள் சிக்கி காற்றில் படபடத்தன. கரைகளைச் சுத்தப்படுத்தும் ஏற்பாட்டின் பேரில் அரசாங்கம் தரும் கூலியை பெற்றுக்கொண்டு குப்பைக்கூளங்களை அள்ளிப்போட்டு, செடிகளை பிடுங்கி எறிந்து கரையைத் தூய்மை படுத்தவேண்டும்.

விமலாவைப்போலவே இருபது பேருக்குமேல் பெண்களும், பத்து ஆண்களும் அங்கே கூடியிருந்தனர். ஆண்கள் மத்தியில் நின்றிருந்த கனகராசு அவளைப் பார்த்து சிரித்தான். விமலா ஒருகணம் தயங்கி பின் லேசாக சிரித்து வைத்தாள்.

அவனும் வேலைக்கு வரும்போதெல்லாம் அடிக்கடி அவளைப்பார்ப்பதும், சிரிப்பதுமாயிருக்கிறான். ஆரம்பத்தில் எரிச்சல்பட்டாலும் என்றாவது ஒருநாள் அவன் பார்க்கவில்லையென்றால் விமலா தவிப்பாய் உணர்ந்தாள்.

மாநிறத்தில் முறுக்கேறிய உடலுடன் கட்டிளங்காளையாக நின்றிருந்த அவனின் வசீகரப்பார்வை விமலாவை தடுமாற செய்தது. அவளும் நல்ல அழகுக்காரிதான். அதிலும் இப்போது துடைத்துவைத்த குத்துவிளக்குபோல் பளீரென்றிருந்தாள்.

உள்ளே சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த தீ அவள் மேனியெங்கும் தகதகத்து ஜொலித்ததில் அவள் நெருப்பின் சாயலில் பளபளத்து நின்றிருந்தாள். துளி பட்டாலும் பற்றிக்கொள்ளும் நெருப்பு மொத்த முழுவதையும் துவம்சம் செய்தே அடங்கிப்போகும்.

கனகராசுவுக்கு நெருப்பில் குளிக்க ஆசை. அந்நெருப்பு வெகுநாளாக கனன்று கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும். அதனால் கள்ளப்பூனை போல நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

மதியநேரம். விமலாவுக்குச் செடிகள் பிடுங்கி, பிடுங்கி உள்ளங்கைகள் எரிந்தன. பெருமூச்சு விட்டு பெண்களோடு மரத்தடியில் ஒதுங்கினாள். ஆளாளுக்கு கொண்டுவந்திருந்த டப்பாவை திறந்து பேசிக்கொண்டே சாப்பிட அவளுக்கு வயிறு முட்டிற்று.

“ இதோ வந்துடுறன்” என்றவள் எழுந்து கொஞ்சதூரம் நடந்துவந்து குத்துச்செடிக்கு பின் மறைந்தாள். வயிறு தளர்ந்து எழுந்தபோது கனகராசு பின்னால் நின்றிருந்தான். பார்த்தவளுக்கு திக்கென்றிருந்தது.

“ விமலா.....”

“ நீ......நீங்க.....”

“ ஒன்னையப் பாக்கத்தான் வந்தேன்” என்றவன் பார்வையால் அவளைத் துளைத்தான். அவள் தடுமாறி தலைகுனிந்து கொண்டாள்.

“ ஒன் நெலமைய நெனச்சி எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு புள்ள. ஆண்டவன் ஒன்னைய இந்த நெலைக்கி ஆளாக்கியிருக்ககூடாது. “

அவள் பேசாது நின்றிருந்தாள்.

“ பொழங்காத எடத்துல செலந்தி வலை கட்டி நாஸ்தி பண்ணிரும். செலந்தி மட்டுமில்ல, கரப்பான்பூச்சி, தேளெல்லாம் கூட வரும். அதுவே அடிக்கடி பொழங்குனா எடம் அம்புட்டு சுத்தமா பளிச்சின்னு இருக்கும்.”

அவன் சொல்லிக்கொண்டே மெல்ல அவள் கரத்தைப் பற்றினான். விமலாவின் இதயத்துடிப்பு அதிகரித்தது. உடலெங்கும் படர்ந்து பரவிய வெம்மை அவளின் கட்டுப்பாட்டிலிருந்த பெண்மையை கபளீகரம் செய்துவிடும் போலிருந்தது. ஒருகணம் தான்.

“ விமலா.......”

கருப்பாயி குரல் கொடுத்தாள். விமலா சுதாரித்துத் கொண்டு வெடுக்கென அவனிடமிருந்து கையை பிடுங்கிக்கொண்டு ஓட்டமாய் ஓடிப்போனாள்.

“ இவ்ளோ நேரம் அங்க என்னாடி பண்ணுன....?”

“ அது...........அதுவந்து............”

“ பேயப்பாத்தாப்ல ஏன்டி இப்புடி வேர்த்து வடியிற.......?”

“ யக்கா.....அங்க பெரிய பாம்பு ஒண்ணு. பாத்ததும் மயக்கமே வந்துருச்சி....”

தட்டுத்தடுமாறி பொய்யைச் சொல்லி சமாளித்தாள்.

“ சரி, சரி சீக்கிரம் சோத்த தின்னு. நேரமாவுது.”

விமலா அமர்ந்தாள். கைகள் நடுங்கிற்று. ஒருவாய் சோறு கூட உள்ளிறங்கவில்லை.

டப்பாவை மூடிவைத்தவள் தண்ணீரை மடக்மடக்கென்று குடித்தாள். கொஞ்சம்

விட்டிருந்தாலும் கனகராசு அவளை தன்வசப்படுத்தியிருப்பான். அந்த குத்துச்செடியின் மறைவு போதும் அவன் தன் பசியை தீர்த்துக்கொள்ள.

ஆனால் அதன்பின் .........நினைக்கவே கூசிற்று. மேற்கொண்டு வேலை செய்யமுடியாது கால்கள் துவண்டன. ஆனால் அவனோ எதுவும் நடவாததுபோல் செடி பிடுங்கிக்கொண்டிருந்தான்.

விமலா வேலையிலிருந்து பாதியிலேயே வந்துவிட்டாள். அவளைப்பார்த்த மாத்திரத்தில் மாரிமுத்துவிடத்தில் ஒரு பரபரப்பு தொற்றிக்கொண்டது. தனியாளாய் படுத்து கிடந்தவனுக்கு அவளைப்பார்த்ததும் ஒரு ஆசுவாசம் கிடைத்தது போலிருந்தது. லயன்ஸ் கிளப்பில் மூன்று சக்கர சைக்கிளொன்று வாங்கித்தருவதாக சொல்லியிருந்தார்கள்.

'அது வந்துவிட்டால் கொஞ்சம் அங்கே, இங்கே போகலாம், வரலாம். சிறு தொழில்கூட ஏதாவது செய்யலாம். அதனால் சின்ன வெளிச்ச கீற்றாய் வாழ்க்கையில் ஒளி உண்டாகலாம். எல்லாவற்றுக்கும் மேலாக படுத்தே கிடக்க வேண்டியிராது. வெறுமையோடிய பொழுதுகளில் உழன்று தவிக்க வேண்டியிராது.. ஆனால் விமலா ................'

நினைத்தமாத்திரத்தில் பொசுக்கென்று ஆகிப்போனது.

'விமலாயிடத்தில் கணவனாக நடந்து கொள்ள முடியாத கேவலத்துக்கு செத்து தொலைக்கலாம். '

அவன் மனசு கூக்குரலிட்டு அழுதது.

பாதி ராத்திரி.

அசந்த தூக்கத்திலிருந்த மாரிமுத்து, மேலே ஏதோ அழுத்துவது போலிருக்க திடுக்கிட்டு விழித்தான். விமலா அவனை இறுக அணைத்துக் கிடந்தாள்.

" வி............விமலா......"

அவள் குமுறி, குமுறி அழுதாள். குத்துச்செடிக்கருகில் நடந்ததை, நடக்க இருந்ததை எண்ணி தாளமாட்டாமல் கதறினாள். மாரிமுத்து விக்கித்துப் போனான். பேச வாய்வரவில்லை. பல நாட்கள் பேசாமல் கிடந்ததில் அவளிடம் எப்படி பேசுவது என்பதான தயக்கம்.

விமலாவுக்கு நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. மாரிமுத்துவுக்கு மூச்சு முட்டிற்று. அவள், அவனை நெஞ்சோடு அணைத்தபடி கிடந்தாள். அவன் கைகள் அவளைப் பற்றிக்கொள்ள துடித்தன. உடலுக்கு உணர்ச்சிகள் இல்லையென்றாலும் மனசுக்கு இருக்கிறதே. அது அவள் மீதான பாசத்தில் கடலலைகள் போல் புரண்டு, புரண்டு பொங்கிற்று. இருந்தும் அவன் கண்கள் இறுக மூடிக்கிடந்தான்.

ஒரு ஸ்பரிசம், ஒரு கனிவான பார்வை இதிலெல்லாம் அடங்கப்போவதில்லை தாபம். அடுத்தடுத்து முன்னேறி உச்சத்தைத் தொடவேண்டும். அப்போதுதான் அது குளிரும். சாந்தமடையும். களைப்படைந்து உடலை விட்டு விடுதலையடையும். அதற்கெல்லாம் வாய்ப்பே இல்லையெனும் பட்சத்தில் என்ன செய்து என்ன..........

மாரிமுத்து இப்போது முழுமரக்கட்டையாய் உணர்வுகளற்று கிடந்தான். ▶

# கவிஞர் ராம்க்ருஷ் கவிதை

## ஆசை முத்தம் தாராயோ



சின்னச் சிட்டே பவள வாய் திறந்து
கன்னம் தொட்டு மலர் இதழால் ஒரு
மென்மை அன்பு முத்தம் தாராயோ
உன் மூக்கோடு என் மூக்கை உரசாயோ

வாயோடு நாக்குமே என் கன்னம் தொடுதே
சேயோடு கொஞ்சும் நேரம் இன்ப நேரமன்றோ
தாயோடு கொஞ்சும் சிட்டு உன் முகம் பார்த்து
வாயோடு கன்னமும் காத்திருக்கு உனக்காக

பால் வாசனை இன்பம் நுகரவே விரும்புகிறது
சூல் கொண்ட மேகமாக வாயூறும் எச்சிலை
மேல் துண்டென கன்னத்தில் துடைத்திட வா
பல்லில்லா ஈறுகளால் அதைக் கடித்து விடு

முகவாய் கடிக்கும் இன்பத்தில் மறக்கிறேன்
மகவாய் வந்துதித்த உன்னை நினைக்கையில்
சுகமாய் சுந்தர இன்பம் தருகிறது முத்தம்
அகம் முழுதும் இன்ப வெள்ளத்தில் நனைகிறது

ஆசை முத்தம் தாராயோ தங்கச் சிமிழே நீ
ஓசைச் சத்தம் இடு எனக்கு அது இன்னிசையே
பூசை மணி போலே குலுங்கிச் சிரித்திடும் நீ
ஆசை முத்தம் அம்மாவுக்குத் தந்திடு மகளே.

# சங்கர சுப்பிரமணியன் கவிதை

மண்ணில் மனமகிழ்ந்திடும் வாழ்விருக்க
விண்ணில் வீற்றிருக்கவும் விரும்புவோரே
மண்ணை நீவிர் மாசாக்கியது போதாதோ
விண்ணிலும் அதைச்செய்யவும் மாட்டீரோ

மரத்தை வெட்டி வெட்டி மண்மீது சாய்த்தீர்
தரமான வாழ்வுக்கு தீமூட்டி வைத்துவிட்டீர்
ஓடுகின்ற நீரை நம்முன்னோர் தேக்கினரே
சாடுதல்சரியோ மற்றவர் நீரில்லை என்றால்

ஆறுகளில் எல்லாம் அசுத்தம் கலந்திட்டீர்
சோறு படைக்கும் வழி எல்லாம் அடைத்தீர்
மாறுபட்டு இயற்கை முன்னே நின்றுவிட்டு
வீறுடனே இனி இங்கு என்ன செய்யவுள்ளீர்

வானையும் நீங்கள் விட்டு வைக்கவில்லை
வாயுமண்டலத்தில் நச்சுப்புகை கலந்தீர்
மழையைக் கண்டிராத மண்ணின்மீது நீவிர்
இராசயணமழை என்றும் தோற்றுவித்தீர்

பூமிக்குள்ளும் விடாமல்தீங்கு செய்திட்டீர்
அணுவைக் சோதிக்க இடம் பார்த்துவிட்டீர்
பணம் ஒன்றே சேர்க்கும் வழியைக் கண்டீர்
பாழானமண்ணில் பணமேது செய்திடுமோ!




# மகிழை.சிவகார்த்தி கவிதை

*இல்லாதவர்களின் சூத்திரம்
வேலையேதுமின்றி
உலகமே இயங்காது
கிடந்த வேளையில்
வருமானத்திற்காக
ஒரு நடிகரோ இறங்கி
பழங்கள் விற்கிறார் தெருவில்!
உச்சமாய் ஒரு நடிகையோ
ஆட்டோ ஓட்டுகிறார்!
இருக்கப்பட்டவர்கள் எடுத்து செலவு
செய்கிறார்கள் சேமிப்பிலிருந்து!
மத்தியஸ்தர்கள் கடன் வாங்கியும்
அணிகலன்களை அடகு வைத்தும்
சமாளிக்கிறார்கள்!
இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்
அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம்
உழைப்பது உழைத்து சாப்பிடுவது
இரண்டும் இல்லையென்றால்
பட்டினிதான்..
வேலையின்றி எத்தனை நாட்கள்
வேண்டுமானாலும் இருக்கலாம்
ஆனால் பட்டினியாய் முடியாதே!
சொத்துக்காக கையேந்தும் நிலைதான்
என்றாலும் பிச்சையெடுத்தும் பிழைக்கலாம்
என்று சிலர் உபதேசிக்கிறார்கள்
கைகளை கட்டிக்கொண்டு!
அதைக்காட்டிலும் நாண்டுகிட்டு சாகலாம்
என்பதே இல்லாதவர்களின்
சூத்திரமாய் இருக்கிறது
இறந்தகாலத்திலும்
நிகழ்காலத்திலும்..!*

# கா.ந.கல்யாணசுந்தரம் கவிதை

**நஞ்சிட்டு அழித்தச் செயல் !**



*பகலில் ஒளிப்பூக்களோடு உறவாடி
இரவில் கருப்பு மலர்களில்
கரைந்தபடியே வாழ்நாட்கள் கடக்கிறது !
முற்றுப்புள்ளியற்ற கேள்விக்குறிகள்
நிறைந்த வாழ்வில் மனிதம்
சுயமிழந்து ஆணவத்தைக் கையாண்டு
நிலையில்லா எல்லைகளில்
வெறியாட்டம் ஆடுகிறது !
பிறப்பில் ஒன்றுதான் அனைவரும்
இறப்பிலும் வேற்றுமை என்பதே
இல்லையென்பதை உணர மறுக்கிறோம் !
ஏற்றத்தாழ்வுகளில் பின்னிப்பிணைந்து
தோற்றப்பிப்பிழைகளுடன் ஏனோ
சமூக வீதிகளில் நடக்கிறோம் ?
தலைமைப் பண்புகள் பிறத்தலின்
குறியீட்டில் வேறுபடுமா ?
செயற்முறைகள் செயல்படாதா ?
ஒரு வியப்பின் சிகரத்தில்
மனித மனங்கள் கொலுவீற்றுள்ளன !
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட
ஊராட்சித் தலைமை
ஒதுக்கப்படுவது ஏன் ?
அந்தப் பட்டியல் இனத்துத் தலைவி
மனிதநேயப் பட்டியலில்
இடம்பெறாது தூக்கியெறிந்தது ....
ஒரு சமதர்மச் சமுதாயத்தின் ஆணிவேரை
நஞ்சிட்டு அழித்தச் செயலல்லவோ ?*

# ச.அர்ஜூன் ராஜ் கவிதை

**புணர்ச்சியின் கரு நாக்குக்காரி**



குழந்தை வேண்டி
கையில் மருந்து கொலுவுடன்
கருத்தரிப்பு மையத்திற்கு சென்று வருபவளின்
கண்களில் எதிர்ப்பட்டாள்
காமங்கண்டக் கிழவியொருத்தி
அவள் சங்கதிகளை விசாரித்துவிட்டு
‘இதுக்கெல்லாமா ஆஸ்பத்திரிக்கு திரியிறவ’ என
கடிந்து
தன் புடவை முந்தானையில் முடிந்தாள்
ஒத்த ரூபாய் வில்லையை
புணர்ச்சியின் கரு நாக்குக்காரியவள்
ஈரக்குலையிலிருந்து சபித்து
‘பத்துப்பிள்ளைப் பேறுனக்கு போ...’
என்று விசுராக புறப்பட்டாள்.
அந்த யுவதியின்
கர்பப்பை வேர் நரம்பினில்
பாறையின் இடுக்கினில்
பசும்மழையின் முதல் துளியாய்
விந்துத்துமிகள் நீர்மமெடுத்து
கொழுந்தென மலர்ந்து குளிர்ந்திருக்கத்
தொடங்கியிருக்கும்.

● சரஸ்வதி ராசேந்திரன்



# மறக்க முடியுமா?

வள்ளி முதலாளி அம்மா வீட்டு வாழைத்தாரை சந்தையில் போட்டு விட்டு முதலாளி அம்மா சொன்ன காய்கறிகளை வாங்கிக்கொண்டு நடந்தாள் . மாற்றி மாற்றி தூக்கினாலும் இரண்டு கைகளும் இற்றுவிடும்போல வலித்தன .ச்சே சித்திக்ஷீரை மாதத்து கத்திரி வெயில் என்பது சரியாகத்தான் இருக்கிறது .

காலை பத்து மணிக்கே இப்படியென்றால்....எங்காவது சற்று உட்கார்ந்து ஆசுவாசப் படுத்திக்கொண்டு போகலாம் என்றால்.. எஜமானி சத்தம் போடுவாள்

இத்தனை நேரமா என்று? பல்லைக்கடித்துக்கொண்டு நடந்தாள்

எப்படியாவது மகன் சம்முவம் படித்து ஒரு கவர்மெண்ட் வேலைக்குப் போய்விட்டால் போதும் அவனுக்கு ஒரு வழி பிறந்திட்டால் போதும் எனமனது நினைத்தது

அவளின் திருமணம் காதல் திருமணம் இரண்டு வீட்டையும் எதிர்த்து

திருமணம் செய்து கொண்டாள் மருதுவை நஞ்சை புஞ்சை என்று

வள்ளியின் அப்பா கொண்டையா

பிள்ளை ஓரளவு வசதியாகத் தான் இருந்தார் .வசதியான பையனைத்தான் பார்த்தார் ஆனால் அவள் தலை விதி மருதுவை காதலித்து ஓடிபோய் கலயாணம் செய்து கொண்டாள். அந்த அவமானத்தை தாங்க முடியாமல் கொண்டைய பிள்ளையும் அவர் மனைவியும் தற்கொலை செய்து கொள்ள மகன் சேகர் அந்த சொத்துக்களுக்கு அதிபதி ஆனான்

மருது வீட்டிலும் அவ்ர்களை சேர்க்காததால் வருமானத்திற்கு வழியில்லாமல் அல்லலுற்றனர். கூலி வேலை செய்து பிழப்பைநடத்தினர்.

இதில் மூன்றாவ்து உயிர் உருவானது .. குந்தைக்கு பால் வாங்கக்கூட சம்பாத்தியம் இல்லாத நிலையில் மருது வாங்குகிற கூலியில் குடிக்க ஆரம்பித்தான். குடிக்க ஆரம்பித்ததும் மருதுக்கும் வள்ளிக்கும் சண்டை வர ஆரம்பித்தது.

அவள் கஷ்டப்பட்டு இரண்டு வீடு வேலை பார்த்து குழந்தைக்காக கொண்டுவரும் பணத்தை திருடி எடுத்துப்போய் குடித்தான். குடித்து குடித்து ஒரு நாள் குடல் அரித்து செத்தான்.

வள்ளி இந்தப் புயலின் வேகத்தை மெல்ல மெல்ல சகிக்க கத்துக்கொண்டாள் . அந்த ஊரை விட்டு பக்கத்து ஊருக்கு குடி போனாள் வள் நல்ல நேரம் வக்கீல் வீட்டுஅம்மா மீனாஷியை வள்ளியை வீட்டு வேலைக்கு வைத்துக்கொண்டதுடன் தன் அவுட் ஹவுஸிலேயே தங்கவும் இடம் கொடுத்தாள் எஜமானி கொடுக்கும் பணத்தில்தான் சம்முவத்தை வளர்த்து ஆளாக்கி இன்று அவன் பிளஸ் டு எழுதியிருக்கிறான்.

''என்ன வள்ளி சந்தைக்கு போயிட்டு வரியா ?'' அஞ்சலையின்

குரல் கேட்டு நினைவுக்கு வந்தவள்

"ஆமாக்கா நேரம் ஆயிட்டு விரசா நடக்க முடியலை வயசாவுதுல்ல ''

"சம்முவம் படிச்சி வேலைக்குப்போனான்னா கொஞ்சம் சுமை

குறையும் நீயும்தான் ஓடி ஓடி உழைக்கிறே உடம்பு என்ன இரும்பா என்ன? இரும்பு கூட துரு பிடிக்குமில்லே கொஞ்ச நாளைக்குத்தான் இந்த கஷ்டமெல்லாம் விடியாமலா போயிடும் கவலைப்படாதே''

ஆறுதல் கூறினாள் அஞ்சலை

"சரிக்கா நான் வரேன் '' வேகமாக நடை போட்டாள்

"என்ன வள்ளி இத்தனை நேரமா சந்தைக்கு போயிட்டு வர"

"இல்லம்மா வாழைத்தாரை குறச்ச விலைக்கு கேட்டாங்க அதான் பேரம் பேச நேரம் ஆயிட்டு இதோ எல்லா வேலையும் முடிச்சிடறேன் "

மே மாதம் ரிசல்ட் வந்துடும்னு சம்முவம் சொன்னானேன்னு வக்கீல் விட்டு வேலை முடிந்ததும் தவறாமல் தினமும் ஆத்தங் கரை பிள்ளையாருக்கு விளக்குப்போட்டு வேண்டிக்கொண்டாள் வள்ளி'

அவள் பிரார்த்தனை வீண் போக வில்லை சம்முவம் பள்ளியிலேயே முத மாணவனாகத் தேறினான், தாய் சொல்லைத் தட்டாதவன்தான் சம்முவம் ஆனால் அதிக மார்க் வாங்கியதும் இஞ்சீனியருக்குத்தான் படிப்பேன் என்று பிடிவாதம் பிடிக்க வள்ளி நொந்து போனாள்

''இதோ பாரு சம்முவம் நம்ம குடும்ப நிலையையும் யோசி எப்படியாவது ஒரு டிகிரி படிக்க வைக்கிறேன் இஞ்சீனியர் படிப்பிற்கெல்லாம் பணத்திற்கு எங்கே போவது?

சொல்லிப் பார்த்தாள் சம்முவம் கேட்கவில்லை

முதலாளி அம்மாவிடம் கடன் கேட்டபோது

''இதெல்லாம் ஓவர் .சாதாரண டிகிரி முடிச்சவனெல்லாம் உயிர் வாழலை உன் பிள்ளைக்கு குடும்ப நிலைமை புரியலை. இஞ்சீனியருக்குப்படிக்க அஞ்சாரு லட்சம் ஆகும் அதற்கப்புறமும் சம்பாத்தியம் வரணும்னுல இந்த ஆசையை மூட்டை கட்டி வைச்சுட்டு டிகிரி படிக்கச்சொல்லு''

ஆக எஜமானி பணம் கொடுக்க மாட்டாள் பின் யார்தான் கொடுப்பார்கள் இவ்வளவு தொகை ?. வள்ளி தனக்கு யோசனை சொல்லும் செல்;லையா வாத்தியாரிடம் போய் தன் கவலையைச்சொன்னாள்

''இதப்பாரு வள்ளி பத்து வருஷமா உன் பிள்ளைக்கேத் தெரியாம மாசாமாசம் பாணம் கொடுத்து போடசொன்னியே அந்த பணம் இரண்டு வருஷ படிப்புக்கு போதும் .அதோட ஒரு லட்சியத்திற்குத்தான பாடுபடறே பேசாம வெட்கம் மானத்தை விட்டு உன் அண்ணன்கிட்ட சம்முவத்திற்காக பணம்கேட்டுப்பாரேன் ''

''சாரே எந்த முகத்தை வைச்சுக்கிட்டு நான் போய் கேட்பேன் அப்படியே கேட்டாலும் தருவாருன்னு எனக்குத்தோணலே''

''கெஞ்சி கேட்டுப்பாரு கடனா கொடுக்கசொல்லி வேற வழியில்லை வள்ளி"

அப்படியும் கொடுக்கலைன்னா ..யோசனை செய்வோம் ''

வாத்தியார் சொன்னதால் போய் கேட்டாள்

பொங்கிப்போனான் சேகர்

''இந்த புத்தி அப்பா அம்மா இருந்தபோது அவங்களை அவமானபடுத்தும்போது எங்கே போயிற்று?

உனக்கு திமிருடி எங்களையெல்லாம் மதிக்காம ஓடுனே எங்க வயிற்றெரிச்சல் தான் உன் புருஷனை இழந்துட்டு பிச்சை எடுக்கிறே எடுக்கிறது பிச்சை இதிலே இஞ்சீனியர் ஆகணுமோ உன் பிள்ளைக்கு.,,ரொம்பத்தான் ஆசை போ போ பேசாம கடையிலே கணக்கு எழுதும் வேலைக்கு அனுப்பி உனக்கு சப்போர்ட்டா இருக்கச் சொல்லுவியா ?அதை விட்டு முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைபட்டமாதிரி..போபோ ''

கழுத்தைப் பிடித்துத்தள்ளாதக் குறையாக விரட்டினான்

அவமானம் தாங்காமல் வெளியேறினாள்..அவள் மனதில்அன்றே ஒரு வைராக்கியம் பிறந்தது .எப்படியாவது மகனை இஞ்சீனியாக்கிப்பார்க்கணும் என்று அன்று முதல் உட்கார நேரமில்லாமல் உழைத்தாள் எஜமானி அம்மா வீட்டு வேலை முடிந்ததும் தையல் வகுப்பிற்குச் சென்றாள் ஆறே மாதத்தில் ஊருக்கே தையல் தைத்து கொடுத்தாள் மீதி பணத்திற்கு ஆசிரியர் உதவினார் கடன் கொடுத்து இன்னும் ஒரு வருடம்தான் பாக்கி அதற்குள் காம்பெஸ் இண்டெர்வ்யூவில் சம்முவத்திற்கு வேலை கிடைத்தது.. படிப்பு முடிந்ததும்

வேலைக்குப்போனான் சம்முவம்

அம்மா சொன்னபடி மாதா மாதம் செல்லையா வாத்தியாருக்கு கொஞ்சம் கொஞ்சமாக கடனை அடைத்தான் சம்முவம் அதிக

சந்தோஷமும் நிலைப்பதில்லையே வள்ளிக்கு உடல் நிலை மோசமானது பிள்ளைதரும் சொகுசு வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் மோசமான நிலைக்கு வந்தாள். மகனுக்குத்திருமணம் முடிக்க ஆசைப்பட்டாள்

ஒரு நாள்

சேகரின் நண்பன் விசுவம் வள்ளியைத்தேடி வந்தார்

வாங்கண்ணே '' அழைத்தாள் வள்ளி

''வள்ளி வேதனைதான் வேர் வைக்கும் என்பது உன் விஷயத்தில் உண்மையாயிற்று,சேகர் உனக்கு உதவியிருக்கலாம் பணத்திமிரிலே அப்படி பேசியிருக்க வேண்டாம் நானும் எவ்வளவோ சொன்னேன் கேட்க வில்லை நீ ஜெயிச்சிட்டே ஆனால் உன் அண்ணன் நிலைதான் மோசமாயிட்டு ''

''என்ன அண்ணே சொல்றீங்க அவருக்கு என்ன ஆச்சு?''தான் ஆடா விட்டாலும் சதை ஆடும் என்பது இது தானோ ?

ஆமாம் ''வள்ளி உன் அண்ணனுக்கு கான்சர் இன்னும் ஆறு மாசமோ' எட்டு மாசமோதான் டாக்டர் சொல்லிட்டாரு மகளுக்கு வரன் தேடி தேடி அலுத்துப்போயிட்டாங்க உங்க அண்ணி என்ன செய்யறது செய்த வினை யாரை விடும்? உன்னிடம் கேட்க வெக்கமா இருக்குன்னு என்னை தூது விட்டிருக்கிறான் ,அழுவுறான் கெஞ்சறான்

செல்வம் என்கிறது செல்வதுதானே பணமிருக்கும்போது நிலைகால் தெரியாம ஆடிட்டு இப்போ வருத்தப்பட்டு என்னலாபம்? அவன் நிலையை சொல்லிட்டேன் ஏத்துக்கிறதும் ஏத்துக்காமப்போறதும் உன்னிஷ்டம் வள்ளி நான் வரேன்.

எழுந்திருக்க வள்ளி சொன்னாள்.


''அண்ணே அவருக்கு சம்மதம்னா என் மகனுக்கே மல்லிகாவை பண்ணி வைக்கிறேன்.'' அவள் சொல்லி முடிப்பதற்கும் சம்முவம் உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது

''அம்மா அது ஒரு நாளும் நடக்காது என்னை அவமதித்தவரின் பெண்ணை நான் மணம் செய்வதா உன்னை எத்தனை கேவலமா பேசினார் நீ மறந்துட்டியா என்னால மறக்க முடியலே"

''சம்முவம் 'அப்படியெல்லாம் நீ பேசினால் அது தப்பு எனக்கும் அன்று கோபம் வந்தது உண்மைதான் அதற்காக அவர் மாதிரியே நாமும் நடந்தால் அப்புறம் அவருக்கும் நமக்கும் என்னடா வித்தியாசம் ?அவர் அப்படி சொன்னதாலதானே நானும் உன்னை எப்படியாவது உயர்த்திக் காட்டணும்னு வைராக்கியமா எடுத்துகிட்டேன்.இந்த உயர்வுக்கே அவர் நம்மை அவமதித்ததுதான். நீர் அடிச்சு நீர் விலகாது.

''.. நீ சொன்னா சரிம்மா ''

பகை மறந்து முகை முகிழ்த்தது.




# வலம்புரி லேனா கவிதை

**நட்சத்திர மின்னல்கள்**

படுத்தே கிடந்தாலும்
ஓய்வில்லாமல்
உழைத்துக்கிடக்கிறது
தார்சாலை

எத்தனை எத்தனை
உயரங்களில்
இருந்தோ
குதித்தோடி விளையாடுகிறது
அணில்

வலி என்பது
நமக்குத்தான்

வானில்
எத்தனையோ நட்சத்திரங்கள்
பிரகாசமானவையே
கண் சிமிட்டுகின்றன

ஒற்றைச் சுண்டைக்காய்
தணித்திருந்தது
செடியில்.....

என்ன செய்ய....

கெட்டுப் போவதற்காகவே
வானத்திலிருந்து
விழுகிறது
மழை நீர்

# சசிகலா திருமால் கவிதை

**ஏழை வாசல்**


*ஏழை வாசல் பார்வையிடப்படுகிறது*
*ஐந்தாண்டிற்கொருமுறை*
*சம்பிரதாய நோக்கில்...*

*ஏழைகளின் சொத்தை விற்று*
*எட்டுவழி சாலை*
*ஏழைகளின் மூச்சை விலைப்பேசி*
*எரித்து புகைக்கும் தொழிற்சாலை ...*

*கைக்காட்ட வேண்டிய மழலைகள்*
*கை நீட்ட வேண்டிய அவலம்*
*குப்பையாகவே பார்க்கின்றோமே*
*குப்பைப் பொறுக்கி பிழைப்பதாலா?..*
*குப்பைமேடு கூட உயர்கிறது*
*ஏழையின் வாழ்வு உயர்வதெப்போது?..*
*தூக்கமில்லா ஏழைக்கு துக்கமே உணவு*
*இனி எப்போது நனவாகும் ஏழையின் கனவு?...*

*மாடாய் பிறந்திருந்தால் கூட*
*பிழைத்திருந்திருக்கலாம்...*
*ஏழையாய் பிறந்ததாலோ என்னவோ*
*செல்லாக்காசாகவே செல்லரிக்கப்பட்டுவிட்டோம்...*

*ஏழை வாசலை வட்டமிடும் வசந்தம்*
*என்றுமே காலத்தின் கையில்...* ▶




# ஜீவா கவிதை

*என் மௌனத்தின் மீது*
*உன் வார்த்தைகளை வைத்து*
*அழுத்தாதே*
*பாரம் தாங்காமல்*
*திடமான என் வார்த்தைகள் கூட*
*திரவமாய் மாறக்கூடும் கண்ணீராய் !!!* ▶

| சிறுகதை

● மலர்விழி மணியம்



# திருமணம் நிச்சயிக்கப்பட்டது

காலை 5:30 மணி..

கோலம் போட வந்த ராஜாத்தி பக்கத்து வீட்டைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

"என்ன அண்ணே நீங்க இன்னைக்கு வாசல் தெளித்து கோலம் போட்டுட்டு இருக்கீங்க?" என்று பக்கத்து கணேசனை கேட்டார் ராஜாத்தி.

"அது.. பொன்னம்மா விற்கு மாதவிடாய் ரெஸ்ட் எடுக்கட்டும்னு நான் இன்னிக்கு கோலம் போட வந்தேன்" என்றார் கணேசன்.

கணேசனின் பதிலைக் கேட்டுக் கொண்டே வந்த பால்காரரிடம் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு ஓடி வந்தான் கணேசனின் மூத்த மகன் அருண்.

"இன்னைக்கு எவ்வளோ லிட்டர் பால் தம்பி" என்று கேட்டார் பால்காரர்.

"ஒரு லிட்டர் ஊத்துங்க அண்ணாமலை" என்று திரும்பிய கணேசன் "நீங்க யாரு புதுசா இன்னைக்கு பால் கொண்டு வந்து இருக்கீங்க?"என்று கேட்டார்.

"அண்ணாமலைக்கு உடம்பு சரி இல்லைங்க , நான் அவர் பெரியப்பா பையன் தானுங்க" என்றார் புதிய பால்காரர் .

"அப்படியா, அண்ணாமலை கிட்ட நாட்டுக்கோழி முட்டை கேட்டு இருந்தேன் என் மகளுக்கு அவிச்சுக் கொடுக்க, உங்க கிட்ட கொடுத்து விட்டாருங்களா?" என்று கணேசன் கேட்டார்.

"இல்லைங்களே கடையில போனா வெள்ளை முட்டை கிடைக்குங்களே" என்றார் புதிய பால்காரர்.

"எங்க சாமி நல்ல பொருள் கிடைக்குது நம்மளால முடிஞ்ச அளவுக்கு நல்ல பொருளை வாங்கி புள்ளைங்களுக்கு சாப்பிடக் கொடுக்கலாம்னு

தானுங்க"என்றார் கணேசன்.

"அப்பா.. காப்பி வேணும்" என்று கணேசனின் மகள் ராதாவின் குரலைக் கேட்டு திரும்பிப் பார்த்தார் புதிய பால்காரரர்.

"வரேன் சாமி" என்றார் கணேசன்.

"நம்ம பொண்ணுங்களா?"என்று கேட்டார் புதிய பால்காரரர்.

"ஆமாங்க ஒரு பொண்ணு, ஒரு பையன்னுங்க. பொண்ணு இங்க தான் கிருஷ்ணம்மாள் காலேஜ்ல லெக்சரர்" என்று கூறிக்கொண்டே விடைபெற்றார்.

ஒரு வாரம் கழிந்தது..

சனிக்கிழமை காலை 10 மணிக்கு கணேசன் வீட்டின் காலிங் பெல் அடித்தது.

கதவைத் திறந்தார் கணேசனின் மனைவி பொன்னம்மாள்.

"அம்மா.. சிலிண்டர்" என்றான் சிலிண்டர் போட வந்த பையன்.

"வாப்பா.. கிட்சென்ல வச்சிடுறியா ?" என்றார் பொன்னம்மாள்.

சமையலறைக்கு சிலிண்டர் எடுத்து சென்றான். அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருந்தது. கணேசன் மும்மரமாக காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தார். ராதா துணி துவைப்பதையும் அதை அருண் அலசுவதையும் ஓரக்கண்ணால் வாங்கி ஆழ்மனதில் பதிய வைத்தான் சிலிண்டர் போட வந்த பையன்.

வேலை மும்மரத்தில் இவர்கள் யாரும் தன்னை கவனிக்கவில்லை என்பதை உணர்ந்து பெருமூச்சு விட்டான்.

"இந்தா தம்பி காசு" என்று கொடுத்ததை வாங்கிக் கொண்டு கிளம்பினான் சிலிண்டர் போட வந்த பையன்.

ஒரு மாதம் கழிந்தது..

மொட்டை மாடியில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்த அருணிடம் தயங்கிக் கொண்டே வந்தாள் ராதா.

"என்னமா ஒரு மாதிரி இருக்க?" என்று அருண் கேட்டான்.

"யாரோ என்னய பாலோ பண்ற மாதிரி இருக்கு அண்ணா" என்றாள் ராதா.

அன்றிலிருந்து அருண் தன் தங்கையை காலேஜுக்கு அழைத்துச் சென்றான். முடியும் பொழுது அவனே திரும்ப அழைத்தும் வந்தான்.

ராதாவை கூட்டிச் செல்ல அருண் வருவதைக் கண்டு அவளை ஃபாலோ செய்யும் ஒருவன் மாயப் புன்னகையுடன் மறைந்து நின்று கவனித்துக் கொண்டிருந்தான்.

மூன்று மாதங்கள் கழிந்தன..

அன்று ஞாயிற்றுக் கிழமை. கணேசனின் வீடே பரபரப்பாக இருந்தது. ராதாவை பெண் பார்க்க வருகிறார்கள். சமையலறை சொஜ்ஜி பஜ்ஜி வாசனையில் நிறைந்தது.

“10 மணிக்கு மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்திடுவாங்க சீக்கிரம் கிளம்புங்க” என்று விரட்டினார் பொன்னம்மாள்.

எல்லோரும் பறந்து கிளம்பினார்..

மணி பத்து என்று சுவர் கடிகாரம் கூறியது.. மாப்பிள்ளை வீட்டாரின் கார் ஹாரன் சத்தம் கேட்டவுடன் அருண் வெளியே சென்று கேட்டை திறந்தான்.. மாப்பிள்ளையின் தாயும் தந்தையும் இறங்கினர்..

கணேசனும் பொன்னம்மாளும் “வாங்க வாங்க” என்று கைகூப்பி வணங்கி வரவேற்றனர்.

“மாப்பிள வர்லீங்களா?” என்று கேட்டார் கணேசன்.

“ஒரு அரைமணி நேரத்தில வந்துவிடுவாருங்க” என்றார் மாப்பிள்ளையின் தந்தை ராமசாமி.

வீட்டின் உள்ளே சென்று அமர்ந்தனர்..

மாப்பிள்ளையின் தந்தையை உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தார் கணேசன்..

“பேச வேண்டியதை பேசுங்க” என்று மாப்பிள்ளையின் தாய் மேகலை தன் கணவரை இடித்தார்.

“பொண்ண வர சொல்றீங்களா?” என்று ராமசாமி கேட்டார்.

மிகவும் சாதாரண உடையில் வந்து நின்றாள் ராதா.

“நகை எல்லாம் போடலையா முகத்தில மேக்கப்பே இல்ல??” என்று முணுமுணுத்தார் பொன்னம்மாள்.

“சும்மா இரும்மா. கல்யாணத்துக்கு அப்புறம் மேக்கப் போட்டு எங்கள

ஏமாத்திட்டன்னு சொல்லுவாங்க. என்னோட உண்மையான நிறத்த அவங்க ஏத்துகிட்டா போதும்” என்று பொன்னம்மாவின் காதில் ஓதினாள் ராதா..

ராமசாமிக்கும் மேகலைக்கும் ஆச்சரியம் கலந்த திருப்தி ராதாவைக் கண்டதும்.

“உங்க பொண்ணுக்கு என்ன...” என்ற ராமசாமியின் கேள்வியை முடிப்பதற்குள் கணேசன் பதிலை சொல்ல துவங்கினார்.

“நகையும் பணமும் காரும் கேட்கும் வீட்டிற்கு நாங்க எங்க பொண்ண தர மாட்டோம் சார்”என்றார் கணேசன்.

பொன்னம்மாள் ஒரு பைலை கொண்டுவந்து ராமசாமியிடம் நீட்டினார்.

“இது எங்க பொண்ணு படிச்சு வாங்கின யு ஜி , பி ஜி சர்டிபிகேட்ஸ்” என்றார் கணேசன்.

“நல்லா படிக்க வெச்சு இருக்கீங்க” என்றார் ராமசாமி.

“உங்க பொண்ணுக்கு சாப்பாடு...” என்றக் கேள்வியை மேகலை முடிப்பதற்குள் அருண் பதில் கூற முற்பட்டான்.

“எங்கம்மா எங்க ரெண்டு பேருக்குமே சமயலும் சகல வீட்டு வேலையும் சமமாச் செய்ய சொல்லிக் கொடுத்திருக்காங்க” என்றான்.

“நீ ஏதாவது சொல்ல நினைக்கிறியாம்மா?” என்று ராதாவைப் பார்த்து மேகலை கேட்டார்.

“நான் வேலைக்குப் போயிட்டு இருக்கேன். அத கல்யாணத்துக்கு அப்புறமும் தொடர நினைக்கிறேன். கல்யாணத்துக்கு அப்புறம் எங்க வீட்டுக்கு நான் பணம் அனுப்புவேன். என்னால முடியாத பட்சத்தில என்ன கல்யாணம் பண்ணிக்க போறவர் என் வீட்டுக்கு தரணும். அதே மாதிரி அவரால உங்களுக்கு தர முடியாத சூழ்நிலை வரும்போது நான் தருவேன். ஒரு சம உரிமையான சம மரியாதையான வாழ்க்கை வேணும்னு நினைக்கிறேன் “ என்று சொல்லி முடித்தாள் ராதா.

கையை தட்டியவாறு பெருமகிழ்ச்சியுடன் ராமசாமி எழுந்து நின்று கணேசனின் கையைப் பிடித்துக்கொண்டு ,

“என் பொண்ண உங்க வீட்டு மருமகளாக ஏத்துப்பீங்களா?” என்று கேட்டார்.

“என்ன..?!!” என்று மேகலையைத் தவிர அனைவரும் அதிர்ந்தனர்.

அப்பொழுது ராமசாமியின் மகளும் மகனும் உள்ளே வந்தனர்.

“இது என் பொண்ணு மீனா. இது என் பையன் ஆதித்யா” என்று அறிமுகம் செய்தார் ராமசாமி.

இருவரும் வணக்கம் கூறினார்கள்.

“இது சிலிண்டர் போட வந்த பையன் ஆச்சே??” என்றார் பொன்னம்மாள்.

“என்னை ஃபாலோ பண்றது நீங்க தானே??” என்றாள் ராதா.

தன் காதலியைக் கண்ட அதிர்ச்சியில் வாயடைத்து நின்றான் அருண்.

“இது உன் ஃபேமிலியா?” என்று கண்ணால் கேட்டான் அருண்.

“ஆமாம்” என்று கண்ணாலேயே பதில் கூறினாள் மீனா.

“நடந்தது என்னன்னு நான் சொல்றேங்க. என் பொண்ணும் உங்க பையனும் ஒருத்தர ஒருத்தர் விரும்புறாங்க . உங்கள பத்தி தெரிஞ்சுக்கத்தான் நான் பால்காரனா வந்தேன், என் மகன் சிலிண்டர் போடுற பையனா வந்தான். வந்த இடத்துல உங்க பொண்ண என் மகனுக்கு ரொம்ப பிடிச்சு போயிடுச்சு” என்றார் ராமசாமி .

“அதுதான் உங்களை எனக்கு எங்கேயோ பார்த்த மாதிரியே இருந்துச்சு” என்றார் கணேசன்

மேகலை தொடர்ந்தார்..

“நாங்க பணமும் நகையும் எதிர்பார்க்கிற குடும்பம் இல்லீங்க.

எங்களுடைய பதில் எல்லாம் உங்க பதில்களா வந்ததுல எங்க ரெண்டு பேருக்குமே ரொம்ப சந்தோஷம். எங்க பிள்ளைங்க ரெண்டு பேருக்குமே எல்லாமே சமமாதானுங்க சொல்லிக் கொடுத்திருக்கோம். உங்க பொண்ண எங்க வீட்டுல மகாராணியா பார்த்துப்போம். உங்க முடிவை சொல்லுங்க” என்றார் மேகலை.

கண் கலங்கி நின்ற கணேசனிடம் தாம்பூலத் தட்டை நீட்டினாள் ராதா. தன் வீட்டுத் தாம்பூலத் தட்டை எடுத்து ராமசாமியிடம் நீட்டினாள் மீனா.

திருமணம் நிச்சயிக்கப்பட்டது..



## எஸ். ஜெயப்பிரகாஷ் கவிதை

**நிவர்த்தி**

அப்பாவை
திட்ட இயலாத
நாட்களையும்...
கொஞ்ச முடியாத
தருணங்களையும்...
மகனிடம் தீர்த்துக் கொண்டேன்
கண்டிப்பும்
கொஞ்சலுமாய்...

---

## தாரா கவிவர்தன் கவிதை

**அழுகை**

வறுமையில் பொன் விளையும்
பூமியை அ(பி)ளந்து விற்கும் போது
மனம் வேதனை தீயில்
விறகாய் எறிகிறது
நானே சம்பாலாய் மாறி
எனைக் கரைத்தாலும்
இந்த பாவம் தீராது இறைவா.......